திராவிடநாடு

30-10-60 | வார வெளியீடு | விலை 16 காசு


# உயிர்தான் ஏன்? ஏன்?

[ கயற்கண்ணன் ]

முப்பக்கம் கடலுண்டு; முகில்கள் கொஞ்சும்
முடிகொண்ட மலையுண்டு; மலைமேல் நின்று
தொப்பென்றே விழுகின்ற அருவியுண்டு;
துள்ளுநடை நதியுண்டு; தோன்றும் நஞ்சை
தப்பாமல் விளைக்கின்ற செந்நெல் உண்டு;
தமிழைப்போல் இனிக்கின்ற கன்னல் உண்டு;
எப்பொருளு மினிதாயிங் கெல்லாம் உண்டு;
துளிகூடத் தேன்வாழ்வே இல்லை! ஏன்? ஏன்?

மங்கையுளம் பற்றுகின்ற முத்தும் உண்டு;
மண்ணுக்குள் மின்னுகின்ற பொன்னும் உண்டு;
தங்கமெனும் நிலக்கரியும் இரும்பும் உண்டு;
தரமுயரும் மணப்பொருளும் நிரம்ப உண்டு;
சங்கமதில் வளர்ந்திட்ட தமிழும் உண்டு;
சரித்திரத்தில் தனித்தஇடம் தமிழர்க் குண்டு!
பொங்கியெழு! தூங்காதே தமிழா நீதான்!
புதுவாழ்வு இல்லையெனில் உயிர்தான் ஏன்? ஏன்?

# வேதத்தில் விளம்பியது!

"த"

வேதம் தெரியுமா உங்களுக்கு? எந்த வேதம் என்று கேட்கிறீர்களா? நான் சொல்லுவது வேதம் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கின்றவர்களையல்ல. வேதம்—உண்மையான வேதம்—அது தெரியுமா என்று கேட்கிறேன். 'என்ன வேதம்?' என்று என்னையே திருப்பிக் கேட்டுவிடாதீர்கள். வேதம் நான்கு என்பது மட்டும் எனக்குத் தெரியும். அதிலே என்ன இருக்கிறது என்பது இதுவரை எனக்குச் சரியாகத் தெரியாமல் இருந்தது. அண்மையிலேதான் வேதத்தில் எவ்வளவு "சிறந்த" பொருள்கள் அடங்கியுள்ளன என்பதைத் தெரிந்துகொண்டேன்!

ஆத்துமா என்றால் என்ன? பரமாத்துமா என்றால் என்ன? ஒன்றுக்கொன்று கொண்டுள்ள தொடர்பு என்ன? முத்தியடைய பத்திநெறி தேவை--என்று இவை போன்றவற்றை எடுத்துச் சொல்லுவது வேதம் என்றுதான் நீங்கள் எண்ணுவீர்கள். இதுகூடவா தெரியாமல் இத்தனை நாள் வீண்பொழுது போக்கினாய் — என்றுகூட நினைப்பீர்கள். நானும் இத்தனை நாள் அப்படித்தான் விழுமிய பொருள் உரைப்பது வேதம்என்று கருதிக்கொண்டிருந்தேன். விளங்காததை விளக்கி, விரித்துத் தெளிவாக்கும் நூல் வேதம் என்றுதான் உங்களைப்போல எண்ணிக் கிடந்தேன்.

என் அறிவு துலங்கியது: வேதம் என்றால் என்ன என்பதையும் வேதத்திலே என்னென்ன கூறியுள்ளன என்பதையும் அறிந்தேன்: மகிழ்ந்தேனா என்று கேட்காதீர்கள். மனத்திலே பெரிய ஐயம்! இதையெல்லாம் வேதம் சொல்லித்தானா தெரிந்துகொள்ளவேண்டும் என்றும், வேதத்திலே இதெல்லாம்தானா கூறியுள்ளார்கள் என்றும்கூட நினைக்கத் தோன்றுகின்றது. இதையெல்லாம் எழுதியுள்ள நூலுக்கு வேதம் என்று பெயர் இட்டு அழைப்பதைவிட, வேறு ஏதாவது பெயர்வைத்து அழைப்பதுதான் பொருத்தம்.

என்ன பெயர் வைக்கலாம்—சொல்லேன் என்று என்னை நீங்கள் கேட்கக்கூடும். உங்களுக்குக் குழந்தை பிறந்ததும் ஆணா பெண்ணா என்பதை எனக்குத் தெரிவியுங்கள், அழகான தமிழ்ப் பெயர் ஒன்று எழுதியனுப்புகின்றேன். ஆனால் இதற்குப் பெயரிட எனக்குத் தெரியவில்லை. உனக்குத் தெரியாவிட்டால் போகட்டும், நிலைமையைச் சொல், பெயர் என்ன என்று சொல்கிறோம் என்று நீங்கள் கேட்பீர்கள். அப்படி என்னதான் கண்டாய் வேதத்தில், சொல் என்பீர்கள். நான் கண்டதைக் கொஞ்சம் காட்டுகின்றேன்:

"ஒரு நாளைப் பல பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு பாகத்திலும் கிரமமாக என்ன செய்யவேண்டும் என்று ஸ்மிருதிகளில் விதித்துள்ளது. காலையில் எழுந்தவுடன் செய்யவேண்டிய காரியங்கள்:

மலம் கழிப்பது, பல் துலக்குவது, குளிப்பது, கடவுள் வழிபாடு முதலியன. இவ்வொவ்வொன்றிற்கும் வழிகள் உண்டு. மல விசர்ஜனம் எங்கு செய்யலாம், எங்கு செய்யக்கூடாது, அலம்புவதற்கு நீரும் மண்ணும் எங்கிருந்து எவ்வளவு எடுத்துக்கொள்ளவேண்டும் என்பவை பற்றி நூல்கள் கூறுகின்றன...'

ஏதோ வேதம் புராணம் என்று தொடங்கிவிட்டு இடையிலே துப்புரவு (சுகாதார) விதிகளை — மூன்றாம் வகுப்புப் பாடபுத்தகத்தில் இருப்பதைச் சொல்லுகின்றாயே; புத்தகத்தை மாற்றி எடுத்துப் படிக்கத் தொடங்கிவிட்டாயா, என்றுதானே கேட்கிறீர்கள்? புத்தகத்தை மாற்றித்தான் எடுத்துவிட்டேன். தமிழ்மறை எடுக்கவேண்டிய கையில் வேறு ஏதோ ஒன்றைத் தொட்டெடுத்துவிட்டேன். அதில் விளம்பியுள்ள அரிய செய்திகளே மேலே காட்டியவை. இன்னும் இருக்கிறது, கேளுங்கள்:

"அதுபோலவே பல் துலக்குவதைப்பற்றியும். பல்துலக்குவது என்பது வேதங்களிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது."

வேதத்தில் விளக்கப்படும் பொருளைக் கேட்டீர்கள் அல்லவா? பல் துலக்கும் பழக்கம் வேதகாலத்திலேயே இருந்தது என்பதிலே பெருமைப்படவில்லை! பார்த்தீர்களா? யாருக்கு என்றுதானே கேட்கிறீர்கள்? சாதாரண ஆள் அல்ல இதை எழுதி இருப்பவர், தத்துவக் கடலில் தத்தளிக்கும் மேதை என்று பாராட்டப்படும் ஒரு பேராசிரியர், டாக்டர் பட்டமும் பெற்றவர், டி. எம். பி. மகாதேவன் என்பார்.

தத்துவமேதை, தர்க்கித்து விளக்கிடத்தக்க எத்தனையோ செய்திகள் கிடக்க, இதுதானா அவருக்குக் கிடைத்தது எழுத என்று நினைக்கின்றீர்களா? என்ன செய்வது! மக்கள் மலம் கழிக்காமலும், பல் துலக்காமலும், குளிக்காமலும் கெட்டலைவதைக் காணுகின்றார். உலகம் உய்வான் வேண்டி, 'அருமை மக்களே விழியுங்கள், எழுங்கள், பல் துலக்குங்கள், குளியுங்கள் — இதெல்லாம் வேத முறைக்கு வேறுபாடானதோ என்று வேதனையுறல் வேண்டா; வேதம் செப்பிய நெறியே இவை' என்று சொல்ல, இதனையெல்லாம் 'ஆசாரம்' என்ற பெயரால் கட்டுரை ஆக்கித் தருகின்றார், ஆனந்த விகடன் வாயிலாக!

குளிப்பது என்றால் உனக்கென்ன அவ்வளவு அலட்சியம், திருவள்ளுவரே சொல்கிறாரே அதைப்பற்றி, திருக்குறளைப் படித்தது இல்லையோ? என்று கேட்பீர்கள். படித்திருக்கிறேன். நினைவும் இருக்கிறது.

'புறந்தூய்மை நீரான் அமையும்'

என்றார், தெரியும். ஆனால் அவர் சொல்வது இந்த 'வேத விதிக் குளியல்' அல்ல! அதோடு அவர் வெறுங் குளியலை மட்டும் சொல்லி நின்றுவிடவில்லை.

'புறத்தூய்மை நீரால் அமையும். மனிதா, இது உனக்குத் தெரியும். அதை வைத்துக்கொண்டு நான் இன்னொன்று சொல்கிறேன் கேள்' என்கிறார். என்ன அந்த இன்னொன்று.

'அகம் தூய்மை வாய்மையால்காணப்படும்'

அது அமையும், இது காணப்படும் என்று சொற்களில் விளையாடுகின்றாரே யன்றி, நம்மைக் குளிப்பாட்டி முதுகு தேய்த்துவிட்டு, துடைத்துக்கொள் என்று மட்டும் சொல்லி அமையவில்லை. தெரிந்த ஒன்றால் தெளியவேண்டிய இன்னொன்றைக் காட்டுகின்றார். வேதமோ தெரிந்த ஒன்றைக் குழப்பிக், குளிக்கவேண்டியது

(4-ம் பக்கம் பார்க்க)

19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (30—10—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 16

# கடமை! உரிமை!! சட்டம்!!!

அண்மையில், ஐதராபாத்திலுள்ள வழக்கறிஞர்கள் கழகத்தில் உரையாற்றிய இவ்வுபகண்டத்துக் குடியரசுத் தலைவர் பாபு இராசேந்திரபிரசாத் அவர்கள், **கடமை, உரிமை,** சட்டம் ஆகியவைபற்றிக் குறிப்பிட்டு, அவைகள் இந்நாட்டில் எவ்வாறு நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகின்றன—செயல்படுகின்றன என்பதுபற்றிய தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார். வெளியிட்டிருக்கிறார் என்று கூறுவதைவிட, வேதனைப்பட்டிருக்கிறார் என்று கூறுவதே மிகவும் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால், கடமை, உரிமை, சட்டம் என்ற இவற்றின் அடிப்படை நோக்கும் போக்கும் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்ற கவலையை, அவர், தமது உரையின் மூலம் வெளியிட்டிருக்கிறார்.

கடமையை மறந்து உரிமைக் குரல் எழுப்புவோரின் தொகைதான் அதிகப்பட்டு வருகின்றதென்று குடியரசுத் தலைவர் கூறுகின்றார். அதிலும், அரசியல்வாதிகள் என்போரிடையேதான் இந்த உரிமைக்குரல் எழுப்பும் தொகை அதிகப்பட்டுவிட்டதென்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல்வாதிகளிற் பலர், தங்கள் கடமைகளை மறந்து உரிமைகொண்டாடி அதனைப் பெறுவதில்தான் அதிக கவனம் செலுத்துகிறார்கள் என்பதை நாமும் அடிக்கடி எடுத்துக்காட்டி வந்திருக்கின்றோம்.

காந்தியடிகள் போன்ற பெரியவர்கள், கடமைக்கும் உரிமைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டி, எவனொருவன் தனது கடமையைக் கண்ணும் கருத்துமாகச் செய்கின்றானோ, அவன், தனக்குக் கிடைக்கவேண்டிய உரிமையைத் தானாகவே பெற்றுவிடுகிறான் என்பதைத் தெளிவாக — எல்லோரும் புரியும்படி எடுத்து விளக்கியுள்ளார்கள். என்றபோதிலும், கடமை கைவிடப்படுவதையும்; உரிமை, உரிமை, அதிலும் தன்னல உரிமை தடையின்றிக் கிடைக்கவேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்படுவதையும் நாம் காண்பதைப் போலவே குடியரசுத் தலைவரும் காண்கிறார்—கவலைப்படுகிறார்.

இதற்குக் காரணம் கண்டுபிடித்து, இந்தச் சீர்கேட்டைச் செப்பனிட்டுத் திருத்தவேண்டிய இடத்தில்—பொறுப்பில் இருப்பவரே கடமை காற்றில் பறக்கவிடப்படுகிறது; உரிமை உரத்த குரல் எழுப்புகிறது என்று உளம் நொந்து கொள்கிறார் என்றால், மற்றச் சாதாரணமானவர்கள் — சாமான்யர்கள் — கடமையை மறந்து காரியம் சாதிப்பவர்களால் அவதிப்படுவர்கள் எந்த அளவுக்கு வேதனைப்படுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போதுதான், அந்தோ இதுவும் ஒரு குடியரசு நாடா என்று ஆராயவும், அதற்கு ஒரு மாற்றம் காணவும் வேண்டுமென்று விரும்பும் நிலை ஏற்படுகின்றது.

கடமை, உரிமைபற்றிப் பேசிய குடியரசுத் தலைவர் சட்டம் பற்றிய தமது கருத்தையும் வெளியிட்டிருக்கிறார்.

அவர் பேசிய இடம் வழக்கறிஞர்கள் கழகமாதலால், சட்டம் குறித்துக், கடமை, உரிமைபற்றிப் பேசியதைவிட, ஒருபடி அதிகமாகவே சென்று தமது வேதனையைக் கொட்டியிருக்கிறார்.

வக்கீல்கள், நீதிபதிகள் தவிர வேறு யாரும் சட்டம் இயற்ற முற்படக்கூடாது—முனையவும் கூடாது என்ற அளவுக்கு போய் நின்று, வழக்கறிஞர்கள் நீதிபதிகள் ஆகியோரின் பாராட்டுதலைப் பெற்றிருக்கிறார்.

சட்டம் இயற்றுவதென்றால், அதற்குரிய தகுதியும் திறமையும் வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், இந்த உபகண்டத்துக்குரிய சட்டதிட்டங்களை வகுக்கும்போது, குடியரசுத் தலைவரும் உடனிருந்துதான், அவை உருவாக்கப்பட்டதையும், அவை யார் யாரால் இயற்றப்பட்டன என்பதையும் கவனித்துக்கொண்டிருந்தது மட்டுமல்ல, அவை உருவாவதற்கு யோசனைகளும் கூறும் நிலையிலும் இருந்தார்.

ஆனால், இப்போதோ, சட்டம் இயற்றச் சட்ட நிபுணர்களுக்குத்தான் உரிமையும் திறமையும் உண்டு என்கிறார்.

இது காலங்கடந்த யோசனை என்பது ஒருபுறமிருக்கட்டும். சட்டத்தில் ஓட்டை இருக்கிறது என்பதனை இப்போதாவது ஒப்புக்கொண்டாரே! அதற்காக அவரைப் பாராட்டுகிறோம்.

☆

2-ம் பக்கத் தொடர்ச்சி

இன்றியமையாததுதானு என்ற ஐயத்தையே அல்லவா கிளப்பி விடுகிறது!

இதோடல்ல; இன்னும் எத்தனையோ 'அரிய' செய்திகளை அக்கட்டுரையின் வாயிலாகத் தெரிவிக்கின்றார், அவர்.

போகிற கதிக்குப் புண்ணியம் கிடைக்கிறதோ இல்லையோ, பொழுதாவது கொஞ்சம் கழியும் — சிலவற்றைத் தெரிந்து கொள்ளுங்கள்:

குளிப்பது என்றால் எந்த நீரில்? தண்ணீரிலா, வெந்நீரிலா என்று கேட்கிறீர்களா? எதில் குளித்தால் என்ன என்றுஒதுக்கிடவேண்டாம். விழிப்பாக இருங்கள், 'குளிர் வெடவெடக்கிறதே, வெந்நீரில் குளிக்கிறேன்' என்கிறீர்களா? எனக்கென்ன, குளியுங்கள். நட்டம் இழப்பு உங்களுக்குத்தானேயன்றி, எனக்கில்லை. ஏன் என்று என்னைக் கேட்காதீர்கள், இதோ விடை:

"வெந்நீரில் குளிப்பது தேக சுத்திக்காக மட்டுமே. ஆனால் புண்ணியத்தைத் தராது."

தெரிகிறதா செய்தி? புண்ணியம் வேண்டுமானால் தண்ணீர்; வேண்டாவிடின் வெந்நீர்—எது தேவை என்பதைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உங்களுடையது!

எப்படியோ குளிக்கலாம் என்று தீர்மானித்துவிட்டீர்கள். எங்கே குளிக்கப்போகிறீர்கள்? என்ன! என்னை ஒரு மாதிரியாகப் பார்க்கிறீர்கள். நிலையோடுதான் இருக்கின்றேன்; சொல்லுங்கள், இது என்ன கேள்வி? எங்கே குளித்தால் என்ன என்று கேட்கிறீர்களா? பாவம், நீங்கள் ஏதும் அறியாதவர், அதனால் அப்படிக் கேட்டுவிட்டீர்கள். போகட்டும் இதுவரை எங்கு குளித்தால் என்ன, என்ற பாகுபாடு அற்ற தன்மையைக் கைக்கொண்டிருந்தால், இக்கணமே அதை விடுமின்: ஏன் தெரியுமா?

"தனிப்பட்ட ஒருவர் சேகரித்துள்ள நீரில் ஸ்நானம் செய்யக்கூடாது. அப்படிச் செய்வதால் குளிப்பவருக்கு வரும் புண்ணியத்தின் ஒரு பகுதி ஜலத்தைச் சேமித்து வைத்திருப்பவருக்குப் போகும். அல்லது அன்னுருடைய பாவத்தின் ஒரு பாகம் குளிப்பவருக்கு வரும்."

ஆகையால், இனி, நீங்கள் எங்காவது உறவினர் வீட்டிலே போய் இரண்டு மூன்று நாள் தங்க நேர்ந்தால், அந்தக்காலம் முழுதும் குளிக்காமலே இருந்துவிடுங்கள். அதனால் உங்களுக்குப் பாப புண்ணியமாற்று நடைபெறுது. நாறுமே என்கிறீர்களா? கவலை உங்களுக்கு இல்லை. உங்கள் பக்கத்திலே வருபவர்களுக்குத்தான்!

இந்த இடத்தில் கட்டுரையை நான் சரியாகப்படிக்கவில்லை என்று கட்டுரையாசிரியர் கருதக்கூடும். அவருக்கு அந்த ஐயம் எழாமலிருக்க, இங்கே ஒரு முக்கியமான விளக்கத்தைச் சொல்லிவிடுகின்றேன்.

அப்படித் தனிப்பட்டவர்கள் சேகரித்துள்ள நீர்நிலையில் குளிக்க வேண்டி நேரிட்டால் என்ன செய்வது? பரிகாரம் இல்லையா? இருக்கிறது. அதை எடுத்துக்காட்ட மறக்கவில்லை ஆசிரியர்.

"முதலில் மூன்று அல்லது ஐந்து கைப்பிடி களிமண்ணை குட்டையிலிருந்து எடுத்துப் போட்டுவிட்டு..."

குளிக்கலாம். குட்டையாக இருந்தால் சரிதான். சிமண்ட் தொட்டியாக இருந்து அதிலிருந்து வரும் நீரில், நீங்கள் குளியல் அறையில் குளிக்கவேண்டியிருந்தால் என்ன செய்வது? ஒரு வழி எனக்குத் தெரிகிறது. சொல்கிறேன். அடுத்த கட்டுரையில் ஆசிரியர் அதை சேர்த்துக்கொள்ளுவார் என்றும் நம்புகின்றேன்.

மூன்று அல்லது ஐந்து கைப்பிடி களிமண்ணைத் தொட்டியில் எடுத்துப்போட்டுவிட்டுக் குளிக்கலாம்! களிமண் எங்கே கிடைக்கும் என்று என்னைக் கேட்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்!

எல்லாம் சரிதான். குளிக்க வேண்டும் என்றால் நீர் வேண்டுமே அது கிடைத்த பிறகல்லவா, எந்நீரில் எப்படி என்ற சிக்கல் - இப்போதுதான் எங்கும் நீர்த் தட்டுப்பாடு இருக்கிறதே—என்று திகைக்கிறீர்களா? உங்களைப் போலவேதான் நம்முடைய சென்னை நகர மேயர் அப்துல் காதரும் புழல் ஏரியில் புனல் குறைகிறதே என்று கவலைப்படுகின்றார். இதோ ஒரு வழி, நீர்க் குறையைப் போக்க! நானே சொல்கிறேன், அவசரப்படவேண்டாம்.

குளிப்பது என்றால் நீர் வேண்டும் என்று ஏன் எண்ணுகின்றீர்கள்? எதிலும் புதுமை புதுமை புதுமை எனகிறீர்களே, நீரில்லாமல் குளிக்க முயற்சி செய்யக்கூடாதோ! மறுபடியும் உங்களுக்கு நான் நிலையில் இருக்கிறேனு என்ற ஐயம் எழுகிறது அல்லவா? அந்த ஐயம் அகற்றுங்கள். நிலையில் இரு... யாது நின்றுதான் சொல்கிறேன்.

நெருப்பில்லாமல் புகை, விமானி இல்லாமல் செல்லும் விமானம், பணம் இல்லாத பாங்க், மணம் இல்லாத மலர் என்று இப்படி பல இருக்கும்போது, நீர் இல்லாமல் குளிப்பது என்பது மட்டும் ஏன் நடக்காது, முடியாது, கூடாது என்று கருதுகின்றீர்கள்?

வேதத்திலேகூட இதை சொல்லியிருக்கிறார்கள், 'நீரில்லாமலும் குளிக்கலாம்' என்று? ஆமாம் என் சொல்லை நீங்கள் நம்பமாட்டீர்கள், இதோ மகாதேவனை அழைக்கிறேன், அவர் வாயால் கேளுங்கள்:

"நீரில்லாமலும் குளிக்கலாம் இதற்குக் கௌண ஸ்நானம் என்று பெயர். இது ஆ... வகைப்படும்; மந்திரம் (மந்திரங்கள் உச்சரித்து ப்ரோக்ஷணம் செய்துகொள்வது) பௌமம் (மண் பூசிக்கொள்வது) ஆக்னேயம் (விபூதி பூசிக்கொள்வது) வாயவ்யம் (கோதூளியைப் பூசிக்கொள்வது) திவ்யம் (வெயில் காயும் பொழுது பெய்யும் மழைத்துளிகளால் நனைத்துக்கொள்வது) மானசம் (ஈசுவரத் தியானம் செய்வது.)"

இதெல்லாம் குளியல் முறைகள்!

மண்பூசிக்கொள்வது!
விபூதிபூசிக்கொள்வது!
கோதூளி பூசிக்கொள்வது!
மனதாலே நினைப்பது!
மகேசுரனைப் பூசிப்பது!
மழையில் நினைவது!

இப்படிக் குளிப்பது என்றால் தண்ணீர்த்தட்டுப்பாடு ஏன வரப்போகிறது. என்னவோ சாமி... கொண்டுவருவது அது இ... கிறார்கள், ஏன் அந்த வீண் முயற்சிகள் எல்லாம்? இப்படித்தான் குளிக்கலாம் என்று சட்டம் போட்டுவிட்டால் போகிறது. மீறுகின்றவர்களுக்கு தண்டம் (அபராதம்) விதிக்கலாம். வருவாய்க்கு வருவாயாவதுவரும். ஒரு புழலே போதும், இன்னும் இரண்டு ...டினங்களைக் கட்டிப் பேய்க்கலாம்.

இதெல்லாம்தான் வேதத்தில் உள்ளது! வேதம் என்று பெயரிட்டு அழைப்பதைவிட, வேறு ஏதாவது பெயரிடலாம் என்று நினைக்கிறீர்களா—நீங்களே சொல்லுங்கள்—வேறு பெயர் என்ன தரலாம்,

★

காஞ்சீபுரம்

30 10 60

# தம்பி !

குழல்மொழி, கயல்விழி, துடியிடை, புன்னகை பூத்திடும் பொன்னவிர் மேனியாள்,
ஏழிசைவல்லி, ஆடலழகி, எனும் அணங்குகள், தத்தமது திறனதனை [illegible]
கடையின்றிக், தரக்குறைவின்றிக் காட்டிப் பார்த்தனர்—காவலன, கடுகடுத்த முகத்
தோனனுமேனயன்றிக், கலகலப்புப் பெற்றானில்லை.

மாற்றார்கள் களத்தில் போட்டோடிச் சென்று, மாமல்லர்களால் எடுத்துவரப்பட்ட,
குருதிதோய்ந்த கொடிகள், உடைந்துகிடந்த யானைத் தந்தங்கள், வாட்பிடிகள், வேற்
கம்புகள், இவையெலாம் கொண்டுவந்து எதிரே குவித்துக் காட்டினர்,
கோமான், வீரச்செயல் பற்றிய நினைவுபெற்று, மகிழ்ச்சி பெறுவான்
என்று எண்ணி; மாமன்னனோ, அப்பொருட் குவியலைக் கண்டு புன்ன
கையும் செய்தானில்லை.

கன்னியரின் கடைக்கண் ஊட்டிடாத சுவையைக் கனிவகையா
தந்திடும்! எனவே, பழவகைகளைக் கொணர்ந்ததும், பட்டத்தரசன,
எட்டிப்போ! என்று கட்டளையிட்டான், பணியாட்களை நோக்கி.

மன்னன் மனமகிழவேண்டும்—அவையினர் ஏதேதோ எண்ணினர்;
தெளிவு பிறந்திடவில்லை.

“யானறிவேன், அவருக்குக் களிப்பூட்டும் வகை” என்றான், கவிதை வல்லா
னொருவன்.

“ஐயா புலவரே! எதுகைமோனையைக் காட்டியா, மன்னனை மகிழ்விக்க முயல்கிறீர்.
வானவில்லென வளைந்து நின்றாள், வடிவழகி; மன்னன் ஏறெடுத்தும் பார்த்திட
மறுத்தான். கரம் இரண்டன்றி வேறோர் துணை தேடாது, வேங்கையுடன
போரிட்டுக், கழுத்தை நெறித்தானே, வேங்கையை — வெற்றிவேலன் பெற்றெடுத்த
வீர மைந்தன் — அதன பறகளைக் கொட்டிக்காட்டினேனும்—சுற்றுமுற்றும் பார்த்தனனே
யன்றி, மன்னன், அதனை உற்றும் பார்த்ததுண்டா? இந்நிலையில் உள்ளான ஊராள்
வோன்; நீவிர், ஏடுதூக்கிக் காட்டிடின் வேந்தன் கொண்டுள்ள கசப்பெலாம் கரைந்
தோடிப்போகும்; களிப்பு மலரும் எனறு கருதுவது, எத்துணை பேதைமை!” எனறு
எடுத்துரைத்தனர், அவை அமர்ந்த முதியோர்.

“ஐயன்மீர்! அருங்கவிதைத் திறன்காட்ட அல்ல, மகிழ்ச்சியூட்ட விரும்புவது.
என் கவிதையும், அரசர்க்குச் சிரிப்பூட்ட அல்ல; அவனிக்கு அறிவூட்ட! அதனையும்

# எல்லோரும் இந்நாட்டு மன்னர் [1]

அறிமின்! யான் நினைப்பது முற்றிலும் வேறு!!" என்றான் புலவன்.

"வாதிட்டுப் பொழுதினை ஓட்டுடுவதைக் காட்டிலும், அவர் வகுத்திடும் முறையேனும், மன்னனின் சோகத்தை நீக்கிடுகிறதா என்பதைக் கண்டிடுவதே சாலச் சிறந்தது" என்றனர் ஆன்றோர்.

புலவர், எழுந்தார்; பணியாளிடம், ஏதோ, மெல்லிய குரலிற் கூறினார்; அமர்ந்தார்! அரசனை விளித்தார்.

"கோமானே! எட்டுத் தளபதிகளைக் கீழே வீழ்த்தி, பதினாறு வேற்படை வீரரின் பற்களைத் தட்டிப்பறித்து, பழம்பெரும் போர்க்கலை ஆசானின் இடுப்பிலே, ஈராண்டும் தீராத, வலி ஏற்படத்தக்க தான உதை கொடுத்து, கரிப்படைத் தலைவனின் கண்ணைக் கலங்கிடச்செய்த, வீராதிவீரன், குரலெடுத்துப் படை நடுங்கிட வைத்திட வல்லோனும் வெஞ்சமர்ச் சூரன், தங்களைக் காண வருகிறான்—கட்டளைக்குக் காத்திருக்கிறான் — அனுமதி அருள்வீரா? — என்று கேட்டான். மன்னன், "ஈதென்ன விந்தை! இத்துணை வீரச்செயல் புரிந்தோனை, யான் ஏன் இதுவரை காணவில்லை." என்று எண்ணிப் புலவரை நோக்கி, தளபதிகள் எண்மர், வேற்படையாளர் பதினாறுபேர், மற்றும் கரிப்படைக் காவலன், ஆகியோரைத் தாக்கியவனா—யார் அவன்? எங்குளான்? கொண்டுவந்து நிறுத்தும், அவனை, நம்முன்—தாமதமின்றி!" என்று முழக்கமிட்டான்.

பவனிக்கான இசைமுழக்கம் எழும்பிற்று.

பராக்குக் கூறுவோர் பதின்மர் வந்து நின்றனர்.

பந்தல் அமைத்ததுபோன்ற பட்டுப் போர்வையைப் பலர் முறைப்படி ஏந்திவந்தனர்.

மன்னன் எதிர்ப்புறம் அந்தப் பந்தற்போர்வை வந்தடைந்ததும், இனிக் காணீர், தளபதியின் பல் உடைத்து, வீரனின் விலாவை நொறுக்கி, கரிப்படையானைவீழ்த்திய, மாவீரனை!—என்றுகூறிக், குறி காட்டினான் புலவன்; போர்வையை நீக்கினர்; கோவேறு கழுதை ஒன்று, நின்றது, மன்னன் எதிரில்; மன்னன், இடிஇடியெனச் சிரித்து, "ஏடா! வீராதி வீரா! நீதானோ, புலவர் போற்றிய மாவீரன்! எட்டி உதைத்து இத்தனையையும் செய்ததன்றோ, நம் பாடி வீட்டுக்குக் கொட்டிலில் இடந்திடும் இக் கோவேறு கழுதை! பலே! பலே! எறி ஈட்டிக்கும், கொடுவாளுக்கும் அஞ்சாது போரிடும் என் தளபதிகள், இதனிடம் படாதபாடுபட்டனர்; பல் உடைபட்டனர்; ஆம்! புலவரே! ஆம்!"— என்று கூறிக் கூறிச் சிரித்தான் கோமான்; அவையினர் அனைவருமே, புலவர் செய்தளித்த நகைச்சுவை நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர்.

ஆடலும் பாடலும், அருங்கவிச் சுவையும், வீரமும் வெற்றிப் பொருட்களும் பெற்றளிக்கமுடியாத பெருஞ் சிரிப்பை, கோவேறு கழுதை அளித்திட முடிந்தது.

*

முடி ஆட்சியிலே, மூதறிஞர்களாகவும், வெற்றி வீரர்களாகவும் விளங்கிய மன்னர்கள் இருந்தனர்—கொலைபாதகத்துக்கு அஞ்சாத கொடியவர்களும் கோலேந்திகளாகி இருந்தனர்—மடைமை மிக்கவர்களும், மன்னன் மகனானதால் மன்னனாயினர்!

கொடுமை புரிந்தவர்கள் கோல் முறிக்கப்பட்டது.

மடைமை கொண்டோரின் அரசு, மதியிலிகளின் மந்தகாசக் கூடமாகவும், நத்திப் பிழைப்போரின் புகலிடமாகவுமாகி, மக்களால் எள்ளி நகையாடப்பட்டது!

இந்நிலைக்கு முடிஅரசு சரிந்ததும், முறை மாற்றமாக வேண்டும்—ஒருவனிடம், அதிகாரமத்தனையையும் ஒப்படைத்துவிட்டு, அவன் அறிவாற்றலுள்ளவனானால், அவதிக்கு ஆளாகாமல் இருக்கவும், கொடியவனானால், அஞ்சி அஞ்சிக் கிடக்கவும், மதியற்றவனானால் கேலிப் பொருளாகி இருக்கவுமான, நிலைமையைத் தாங்கித் தாங்கிப் பார்த்து, இனி இது ஆகாது என்ற முடிவுக்கு வந்த பிறகே, பேரறிவாளர் பலர் எண்ணிப் பார்த்து எடுத்தியம்பியது மக்களாட்சி முறை என்பது.

முடி ஆட்சிக் காலத்திலே, மன்னனிடம் மக்கள் அச்சத்துடன் அடங்கிக் கிடக்க நேரிட்டது; கொடுமை செய்யும்போது குமுறிச்சாக நேரிட்டது; மடைமைக்காரனாக இருக்கும்போது வெட்கப்பட்டுக் கிடக்கவேண்டி நேரிட்டது; எனினும், மன்னன் சரியில்லை, எனவே, அவனை நீக்குவோம், வேறு தகுதியுள்ளவனை ஆசிப்பீடம் அமர்த்துவோம் என்று கூறிடும், ஆற்றலும் உரிமையும், மக்களிடம் இல்லை.

பெய்யெனப் பெய்யும் மழை வளமளிக்கிறது; பேய் மழை நாட்டை அழிக்கிறது. பூங்காற்று இனிமை பயக்கிறது, சூறைக் காற்று ஊர் அழிக்கிறது.

ஆனால், இயற்கையின் செயலைக் கட்டுப்படுத்த இயலாமல், மாமழை போற்றியும், பேய்மழை கண்டு துயருற்றும், பூங்காற்றுப் பெற்று இன்புற்றும், அழிவூட்டும் காற்றால் அவதியுற்றும், நாம் யாது செய்யவல்லோம்; இயற்கையை நாம் எங்ஙனம் கட்டுப்படுத்த இயலும்!—என்று எண்ணிக்கிடந்திடும் போக்கினைப் போன்றே, மக்கள், முறை தவறும் மன்னன், முறை அறியா மன்னன் என்போர் ஆட்சி நடாத்தி, அவதியை மூட்டிய காலத்திலும், இயற்கை சிற்சில வேளைகளில் கொடுமையை ஏவுவது போல, ஆண்டவன், எக்காரணம் குறித்தோ நமக்குக் கேடு சூழ்ந்திடக் கொடுமையாளனைக் கோலேந்தியாக்கினான்; மடைமை மிக்கவனை மன்னனாக்கி மகிழ்கிறான்! நாம் எங்ஙனம், இதனைத் தடுத்திட முடியும்! எங்ஙனம் மாற்ற இயலும்! நமக்கு ஏது அத்த ஆற்றல்!!—என்று எண்ணிக் கிடந்தனர் நீண்ட காலம்.

கண்ணீர் முழுதும் வற்றிய பிறகு, கனல் பிறந்தது கண்களில்; தொல்லையின் எல்லைவரை துரத்தப்பட்ட பிறகு, துணிவு பிறந்தது நெஞ்சத்தில்; பிறகே, முடி ஆட்சி முறை, திட்டவட்டமாக, இன்ன குணமுள்ளதாக இருக்கும், இன்ன பலன் தரும் என்று அறுதியிட்டுக் கூற இயலாததாகவும், மாற்றி அமைக்க முடியாததாகவும் இருப்பதனால், அதனை நம்பி, மக்கள் தமது வாழ்க்கையை ஒப்படைப்பது கூடாத காரியம்—எனவே, மக்கள் கண்டறியத்தக்கதும், தேவைப்பட்டபோது மாற்றி அமைக்கத்தக்கதுமான ஓர் ஆட்சி முறை வேண்டும்; நோக்கம் குறித்து அமைத்திடவும், எதிர்பார்த்த நலன் பெற்றளிக்க இயலாது போயின், மாற்றிடவும், தக்கதான ஆட்சிமுறை இருத்தல் வேண்டும், என்ற முடிவுக்கு மக்கள் வந்தனர்—குடிஅரசு கண்டனர்.

தம்பி! குடிஅரசு கண்டனர், என்று மிகச் சுருக்கமாகக் கூறிவிட்டேன்—ஆனால் மிக நீண்ட, பயங்கரப் பயணம் நடாத்தியே மக்கள் குடிஅரசு கண்டனர்.

*

முடிஅரசு, கேடு பயப்பினும், மக்கள் தாங்கிக் கொள்ளவேண்டுமேயன்றி, மாற்றிவிட இயலாது.

குடிஅரசு, கேடு தந்திடின், மாற்றி அமைத்திடும் உரிமை மக்களுக்குக் கிடைக்கிறது.

முடிஅரசு, கோணல் வழி சென்றிடினும், கண்டித்துப் பேச, மக்களுக்கு உரிமை கிடையாது—உயிரைப்பற்றிய கவலை இருக்கும் வரை!!

குடி அரசு, தவறு செய்வதாகத் தோன்றும் போதே, மக்கள், எடுத்துரைக்கலாம், கண்டிக்கலாம், எதிர்க்கக்கூடச் செய்யலாம்.

முடி அரசுக்கும், குடி அரசுக்கும் இடையே உள்ளது இந்த வித்தியாசம். பல நூற்றாண்டுகள் சிந்தனையாளர்களும் வீரத்தியாகிகளும், அரும்பாடுபட்டு ஈட்டிய முறை, குடி அரசு.

முடி அரசுக் காலத்தில், மன்னனை மகிழ்விக்க வேண்டியது, தமது கடமை என்று இருந்தனர் மக்கள்.

அந்த மகிழ்ச்சி, கதை காட்டினேனே, அதுபோல் கோவேறு கழுதையின் வீரம்பற்றி, நகைச்சுவையுடன் எடுத்துக்கூறிக் களிப்பூட்டும் வகையினதாகத் தான் இருக்கும் என்பதல்ல பொருள்—மதியிலி மன்னனாக இருக்கும்போது இதுபோதும்! மமதையாளன் மன்னனானாலோ, அவன் மனம், குடிமகனொருவன் பெற்றெடுத்த செல்வத்தின் கற்பைச் சூறையாடுவதிலேதான் மகிழ்ச்சி பெறும் என்றால், அதுதான் நடக்கும்; மானமுள்ளோருக்குப் புகலிடம், சிறைக்கோட்டம், வெட்டுப்பாறை, அல்லது மரக்கிளை!

முடி அரசுக் காலத்து முறை, மக்கள், மன்னனுக்கு மகிழ்ச்சியூட்டிப் பிழைத்துக்கிடப்பது.

குடி அரசுக் காலத்திலோ, மக்களுக்கு மகிழ்ச்சியூட்டி, ஆளவந்தார்கள், இடம் பெற்றிருப்பர்.

பசிப்பிணிபோக்கி, வளம் உண்டாக்கி, நல்வாழ்வு அளித்து, மக்களை மகிழவைக்கும், குடி அரசுகளும் உண்டு, ஒரேநாளில் அமைச்சர் எண்பது ஊர் உலா வந்தார், உமக்காக!! — என்றுரைத்தும், உமக்காக இன்னின்ன திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்று எடுகாட்டியும்; பசிகண்டு பதறுகிறீர்! பாலாறு தயாராகிறது, பாரீர்!! என்று புள்ளிவிவரம் வீசுவதுமான, வேடிக்கை காட்டியும் பொழுதை ஓட்டிடுவோர் நடாத்தும் குடி அரசும் உளது.

கேடளிக்கும் முடி அரசு மாற, முடிதரித்தோன் மாய்ந்திடல்வேண்டும்; ஆனால் கேடளிக்கும் குடிஅரசை மாற்ற, மக்களுக்கு உரிமை இருக்கிறது—அறிந்து.

ஆற்றலுடன், அந்த உரிமையைப் பயன்படுத்த வேண்டும்; பயன்படுத்துவர் என்ற நம்பிக்கையினால் தான், குடி அரசு முறையே வகுக்கப்பட்டது; பல நாடுகளிலே, இந்த நம்பிக்கை வீணாகிப்போகவுமில்லை.

*

தம்பி! ஒரு நாட்டை ஆள்வது என்பது எல்லோராலும் முடிகிற காரியமா...? அதற்கேற்ற அறிவாற்றல் அனைவருக்கும் ஏற்பட்டுவிடுமா? ஆண்டவன் யாரோ சிலருக்கு மட்டுமே, அத்தகைய தகுதியை அருள்கிறான். மன்னர்கள், மகேசனின் அருள் பெற்றோர்! அவனுடைய பிரதிநிதிகள்! என்று கூறப்பட்டது போய், எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று கூறிடத் தக்க காலம் இன்று பிறந்துவிட்டிருக்கிறது; என்றாலும், குடிஅரசு முறை ஏற்பட்டான பிறகு, எதிர்பார்த்ததனைத்தும் கிடைத்துவிட்டது என்று எவரும் கூறிவிடுவதற்கில்லை.

இது குடிஅரசுக் காலம் என்று குதூகலத்துடன் கூறிக் கொள்பவர்களை நோக்கிக் கேலி செய்து கொண்டல்லவா, ஸ்பெயின் நாட்டுப் பிராங்கோவும், போர்ச்சுகல் நாட்டு சலாசரும், உள்ளனர்! எகிப்து நாட்டு நாசரும், பிரான்சின் தெகோலும், இந்தோனேசிய நாட்டு டாக்டர் சுகர்னோவும், மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் எனினும், சர்வாதிகாரிகள் எனும் நிலையில்தானே உள்ளனர். பக்கத்து நாடான பாகிஸ்தானில், பட்டாளத்துத் தலைவர்தானே, ஆட்சி நடத்துகிறார்.

இன்றைய உலகில், முடிமன்னர்களும் உள்ளனர், பிடியைப் பிரபுக்களிடம் விட்டுவிட்டு இருக்கும் முடிதாங்கிகளும் உள்ளனர்.

குடிஅரசுத் தலைவர்களும் உள்ளனர்; குடிமக்களை நல்லபடி நடத்திச் செல்ல நான் எல்லா அதிகாரத்தையும் ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்றுரைக்கும் சர்வாதிகாரிகளும் உள்ளனர்.

பாராளுமன்ற முறை மூலமே, குடிஅரசு முறையிலே பக்குவம் ஏற்படுத்த முடியும்; அந்தப் பாராளுமன்ற முறைக்கு அடிப்படையாகத் தேவைப்படுவது, அரசியல் கட்சிகள்—அந்த முறைதான் இங்கு உள்ளது என்று கூறும் நாடுகள் உள்ளன; சோவியத்தோ, அரசியல் கட்சிகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்வது, நேரக்கேடு, வீணாட்டம்; அத்தகைய கட்சிகள், பணம் படைத்தோரின் உடைமைகளாகிவிடுகின்றன; எனவே மக்களாட்சி என்பது வெறும் கேலிக் கூத்தாகிவிடுகிறது; எனவே, இங்கு ஓரே கட்சிதான் உண்டு, அது மக்கள் கட்சி! ஓரே தேர்தல்தான்—அந்தக் கட்சி மட்டுமே ஈடுபடும் தேர்தல்—இதுதான் உண்மையான மக்களாட்சி! மற்றது போலி! புரட்டு! பகட்டு!—என்று செப்புகிறது.

இது ஆட்சி, முறையிலே ஒரு வகை என்று கூறத்தக்கதேயன்றிப், பாராளுமன்ற ஆட்சிமுறை ஆகாது என்று கூறிடும், அரசியல் தத்துவவாதிகள் நிரம்ப உள்ளனர்.

முடிஆட்சி, ஒரு அருள் பெற்ற குடும்பத்துக்கு மட்டுமே, ஆட்சி நடாத்தும் தகுதி, வழிவழி கிடைத்திடும் என்ற நிலையை, நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

குடிஅரசு முறையோ, கொல்லன் மகனாயினும், உழவனாயினும், சிறுகடை நடாத்துவோனாயினும், செருப்புத் தைப்போனாயினும்,—ஆட்சி நடத்திடும் ஆற்றலைப் பெற்றிட இயலும், என்ற நம்பிக்கையையும், அந்த உரிமை அவனுக்கு உண்டு என்ற நிலைமையையும் ஏற்படுத்தித் தருகிறது.

•

எல்லோரும் இந்நாட்டு மன்னர்—என்பதிலே, மன்னர், என்ற வார்த்தை, ஆட்சி நடாத்தும் உரி

மையைக் குறிக்கமட்டுமே, பயன்படுதல் வேண்டுமே யன்றி, மன்னன்போல், அருள் பெற்றேன், ஆமுல் நடத்துவேன், எது செயினும் முறையே என்று எவரும் இருத்தல் வேண்டும் என்ற, மனப்போக்கை, மண்டைக் கனத்தைக் குறித்திடப் பயன்படுத்தப்படுமானால், குடி அரசு முறை, கொடுமைகளை மட்டும் மூட்டுவதாக அல்ல, மடைமைப் படுகுழியில் மக்களைத் தள்ளிடும் மாபெரும் சதியாகிப்போகும்.

*

இந்த நிலையில் இன்று, நடைபெறும் அரசு முறை ஆகிவிட்டது என்றுதானே, என்னவோ, குடிஅரசுத் தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத், மனம் வெதும்பியது போலவும், கேட்போர் மனம் புண்படும் முறையிலும், சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். பத்ரிநாத் போய்வந்தவர், பாபம் போக மார்க்கம் ஏதேனும் கூறுவார் என்று பலரும் எதிர்பார்த்திருப்பர்—ஆனால் பாபுவோ, இன்றுள்ள ஆட்சிமுறை பற்றி, கேலியும் கண்டனமும், வியப்பும் வேதனையும் நெளியும் விதமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

*

சட்டமன்றங்களில் அமர்ந்து, சட்டமியற்றுவோருக்கு, அதற்குத் தேவையான, அறிவாற்றல் இல்லை; அவர்களுக்கு உள்ள ஒரே ஒரு தகுதி, அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் என்பதுதான். அப்படித் தேர்ந்தெடுத்த மக்கள் யார் எனில், இவர்களைப்போலவே அறிவாற்றலற்றவர்கள்—என்ற கருத்துப்படப் பேசிவிட்டார்.

**குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடுவதுபோல என்பார்களே, அதுபோல, இன்று ஆட்சிமுறை இருப்பதாக, அவர் கருதுகிறார்.**

இவ்விதமான கருத்துக்கொண்டுள்ள, இவரே, குடிஅரசுத் தலைவராக, இன்று அமர்ந்திருப்பது, கேலிக்குரிய, கண்டிக்கத்தக்க, தரம்கெட்ட ஒரு அரசியல் முறையின் மூலமாகத்தான் என்பதை அவர் மறந்துவிட்டிருக்க முடியாது. சிலராகிலும் இதைச் சுட்டிக்காட்டுவார்களே என்பதைத் தெரிந்திருந்தும் தான், குடிஅரசுத்தலைவர் அவ்விதம் பேசியிருக்கிறார். பேசியதோடு நிற்கவில்லை, சட்டமன்றங்கள் செல்வதற்குச் சில தகுதிகள் இருத்தல்வேண்டும்; சில தகுதிகளைக் குறிப்பிட்டு, அத்தகுதிகள் உள்ளவர்கள் மட்டுமே, சட்டமன்றங்கள் செல்லலாம் என்று முறை ஏற்படுத்துவது மிக நல்லது என்றும் எடுத்துக்காட்டி இருக்கிறார்.

மிக உச்சிக்குச் சென்று அமர்ந்து கொண்டவர்களும், சட்டமன்றம் போன்ற இடங்கள் செல்வது தமது தகுதிக்குக் குறைவு என்று கருதுவோரும், சட்டமன்றம்போன்ற இடங்களுக்குச் செல்லமுடியாது இடப்போரும், செய்திடும், 'உபதேசம்' இது என்று மட்டும், பாபுவின் பேச்சைக்கொள்வதற்கு இல்லை.

முன்பொருமுறை, இப்போது இருந்துவரும் எல்லோரும் ஓட் அளிக்கும் முறை இனியும் நீடிக்கவேண்டுமா? அதைவிட, மறைமுகத் தேர்தல் முறை இருப்பது நல்லதல்லவா?—என்ற கருத்துப்பட, நேருபண்டிதர் பேசி இருக்கிறார்.

குடிஅரசுதான் சிறந்தது, ஆனால் அது கட்சிகளற்ற குடிஅரசாக இருக்கவேண்டும் — ஆனால் அதேபோது சர்வாதிகாரமும் கூடாது, சோவியத் முறையும் ஆகாது!—என்று ஜெயப்பிரகாஸ்நாராயணர் கூறிவருகிறார்.

பெரியார், பலமுறை பேசியிருக்கிறார், இராஜாவே ஆண்டால் என்ன? சர்வாதிகாரி இருப்பதுதான் நல்லது!—என்றெல்லாம்.

அவர், இந்த நாடுபற்றியும், ஆட்சி பற்றியும் என்ன கருதுகிறார் என்பதை அறிந்துகொள்ள அவர் பன்முறை பேசி இருக்கிற ஒரு கருத்தைக் கவனித்தாலே போதும்;

> "இந்த நாட்டை எவன் ஆண்டால் என்ன? இந்த நாட்டை ஒரு ஜதை செருப்பு ஆண்டிருக்கிறது, 14-வருஷங்கள்"

என்று பேசி இருக்கிறார்.

இதைக் கவனிக்கும்போது, அவர், இந்த நாட்டு மக்களுடைய போக்கைக்குறித்துக், கொண்டுள்ள வெறுப்புத்தான், அவரை அவ்விதம் பேசவைக்கிறதேயன்றி, ஆட்சி முறைகளிலே, எது சிறந்தது, எது தரமானது என்று எண்ணிப்பார்த்து அவர் ஏதும் கூறுவதாகத் தெரியவில்லை என்பது விளக்கமாகிறது.

*

பாபு இராஜேந்திரர் போன்றவர்கள், இன்று, சட்டம் இயற்றும் போக்குக்கண்டு கசப்புற்று, இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது சட்டம் இயற்ற என்று பேசுவது, என்ன காரணத்தால்? அவர்களுக்குப் பிடித்தமற்ற முறையிலே, சட்டங்கள் இன்று நிறைவேற்றப்படுகின்றன, என்ற கசப்பா? அல்லது, இன்று சட்டமியற்றும் பொறுப்பும் உரிமையும் பெற்றுள்ள தமது கட்சியினர், இனி அந்த நிலையினின்றும், விரைவிலே தள்ளப்பட்டுப் போவார்கள்; அவர்களைக் காப்பாற்ற வேண்டுமானால், யார்வேண்டுமானாலும் சட்டமன்றத்துக்குச் செல்லலாம் என்ற முறையையே மாற்றிவிடவேண்டும் என்று எண்ணுகிறாரா!

சட்டமன்றம் செல்வதற்குச் சில தகுதிகள் இருக்கவேண்டும் என்பது முறையானால், சட்டமன்றத்துத் தேர்தலில் ஈடுபட்டு, 'ஓட்' அளிக்கவும், சில தகுதிகள் இருக்க வேண்டும், அல்லவா? அதாவது, வயது வந்த எல்லோருக்கும் 'ஓட்டு' என்ற முறை இருக்கக்கூடாது என்று ஏற்படுகிறது. அப்படியாகுமானால், நாடு, வெள்ளைக்காரர்கள் ஆட்சி நடத்தி, முணுமுணுத்துக்கொண்டே, சிறிது சிறிதாக, அரசியல் உரிமைகளை மக்களுக்கு அளித்தார்களே, அந்தப் பழைய காலத்துக்கன்றோ இழுத்துச் செல்லப்படும்! அதனைத்தானே, ஐம்பது அறுபது ஆண்டுகளாக, **ஏதேச்சாதிகாரம், பிற்போக்கு அரசியல்**, என்றெல்லாம், பாபுவின் சகாக்கள் கண்டித்தனர்.

**இப்போது, ஏதேச்சாதிகாரமும், பிற்போக்கு அரசியல் முறையும் தான் தேவை, என்ற முடிவுக்குக் காங்கிரஸ் வந்துவிட்டது என்பதைத்தான் பாபுவின் பேச்சு முன்**

கூட்டியே அறிவிக்கிறதோ என்ற அச்சம் எவருக்கும் ஏற்படத்தான் செய்யும்.

சுதந்திரம் பெற்ற உடன், எமது காங்கிரஸ் கட்சி தான், எல்லா மக்களுக்கும் ஓட்டுரிமை வாங்கிக் கொடுத்தது என்று மார்தட்டிக்கொள்ளும் காங்கிரஸ், இனி வெகு விரைவில், கொடுத்த ஓட்டுகளைப் பறித்துக்கொண்டு, எதேச்சாதிகார அரசியல் முறையை அமுல்நடத்தப் போகிறதோ, என்னவோ, யார் கண்டார்கள்!

•

எகிப்து நாட்டிலே, படைபலம் காட்டி, ஆட்சியைக் கைப்பற்றியுள்ள, நாசர் நல்லவர், திறமை மிக்கவர், இலட்சியவாதி—எல்லாம் உண்மை. ஆனால், அவர், நான் பார்த்து, ஒத்துக்கொள்வது மட்டுமே அரசியல் கட்சி என்ற உரிமையைப் பெறமுடியும்—மற்றவை தலைகாட்டக்கூடாது என்று கூறிவிட்டார்.

அவருடைய சொல்லே சட்டம்! ஏனெனில், அந்தச் சொல்லுக்கு வலிவளிக்கப், பெரும்படை தயாராக இருக்கிறது.

அவர் போன்றே, இந்தோனேசிய அதிபர் சுகர்னோவும், அரசியல் கட்சிகளுக்கு, இன்னின்ன இலக்கணம் இருக்கவேண்டும்; இவ்விதம் நடந்துகொள்ள வேண்டும், இல்லையென்றால், அந்தக் கட்சிகளின் சிட்டுக் கிழிக்கப்பட்டுவிடும், என்று அறிவித்துவிட்டார்.

உரிமைகள் பற்றிய ஆர்வமற்றவரோ, டாக்டர் சுகர்னோ? இல்லை! நிரம்பப் பேசி இருக்கிறார், ஐக்ய நாடுகள் மன்றத்திலே!!

தம்பி! இந்தப் பெரும் தலைவர்களின், வியப்பூட்டும் பேச்சுகளைப் பார்க்கும்போது, இவர்கள் ஒவ்வொருவரும், தமக்கு எவை சாத்தியமோ, பிடித்தமோ, அவை மட்டுமே, மக்களுக்கு நல்லாட்சி ஏற்படுத்தித் தரத்தக்கன; மற்ற எல்லா முறைகளும், தீது பயப்பன; எனவே, தேவையற்றன; நீக்கத்தக்கவை என்று கருதுகிறார்கள் என்பது மிக நன்றாகத் தெரிகிறது.

உலகப் பெருந்தலைவர்கள் கூடிப், போர்க் கருவிகளை ஒழித்திட, மாநாடு நடாத்துகிறார்களே, தம்பி! கூர்ந்து பார்த்தால், ஒவ்வொரு தலைவரும், தம்மிடம் இல்லாத போர்க் கருவிகள், உலகிலே மற்ற எவரிடமும் இருத்தல் கூடாது; தமக்குச் சாத்யமாகாத எந்தப் போர்முறையும் திட்டமும், உலகிலே மற்ற எவரிடமும் இருத்தல் கூடாது, என்பதைத்தான், மிகச் சாமர்த்தியமாகப் பேசி வருவது புரியும்.

1932ல் ஜெனிவா நகரில், போர்க்கருவிகள் ஒழிப்புக்கான மாநாடொன்று நடைபெற்றது. சோவியத் நாட்டு லிட்வினூப், இப்போது குருஷேவ் வலியுறுத்தியது போலவே, போர்க் கருவிகள் ஒழிக்கப்படவேண்டும் என்ற திட்டம் கொடுத்துப் பேசினார்.

அப்போது, ஸ்பெயின் நாட்டிலிருந்து வந்திருந்த மாட்ரியாகா என்பவர் ஒரு கதை கூறினார்.

காட்டிலே உள்ள மிருகங்களெல்லாம் கூடி; ஒன்றை ஒன்று கொன்று குவித்திடும் கொடுமையை ஒழிக்க வழிவகை என்ன என்று மாநாடு நடத்தின.

காட்டரசனான சிங்கம், கம்பீரக்குரலில், கழுகைப் பார்த்தபடி, நாமெல்லாம் கூர்மையான மூக்குகளை ஒழித்துவிடவேண்டும், என்று கூறிற்று; புலி, யானையைப்பார்த்தபடி, ஒழிக்கப்படவேண்டியது தந்தங்கள்! என்று பேசிற்று; யானையோ, புலியைப்பார்த்துக் கொண்டே, கோரமான பற்களையும் கூரான நகங்களையும் ஒழித்தாகவேண்டும் என்று முழக்கமிட்டது. இப்படி ஒவ்வொரு மிருகமும், தன்னிடம் எது இல்லையோ எதைவைத்துக்கொண்டு, மற்ற மிருகங்கள் சொல்லும் வலிவு பெறுகின்றனவோ, அவைகளை ஒழித்துவிடவேண்டுமென்ற நோக்கத்துடன் பேசின. கடைசியாகக், கரடி எழுந்தது, கனிவுடன், சொல்லும் செயலுக்குப் பயன்படும், எல்லாமே ஒழிக்கப்படத்தான் வேண்டும்—கொடியவாய், கூரானநகம், நீண்ட கூரிய மூக்கு—எல்லாம் — புவியெங்கும் இருந்து வருகிற, கட்டித் தழுவிக்கொள்ளும் முறைதவிர, மற்றவைகெல்லாம், ஒழிக்கப்பட்டாகவேண்டும், என்று கூறிற்று.

தம்பி! கரடி, கட்டிப்பிடித்தே மற்றதைக்கொல்ல வல்லது. எனவே, கரடி, அதுமட்டும் இருக்கவேண்டும், மற்றவை ஒழியவேண்டும், என்று பேசிற்று என்பதாகக் கூறினார் ஸ்பெயின்நாட்டுக்காரர்.

அது, சோவியத்தைக் கிண்டல் செய்யப் பேசப்பட்டது.

ஆனால், இதிலே தொக்கி நிற்கும் உண்மை, ஒவ்வொருநாடும் மற்றநாட்டுக்கு வலிவு எதுவோ, அதை ஒழிக்கவே, போர்க்கருவி ஒழிப்பு மாநாடு நடத்துகிறது, என்பதுதான்.

போர்க்கருவிபற்றி மட்டுமல்ல, ஆட்சி முறை பற்றியும், பெரும் தலைவர்கள் பேசுவது, இஃதே போன்ற நோக்குடையதாகவே இருந்துவரக் காண்கிறோம்.

•

நோக்கம் இருக்கட்டும், இந்தப் பேச்சுப்பேச ஏன் முன்வந்தனர், பாபு போன்றோர்! மக்கள், குடி அரசு முறையிலே அடியோடு நம்பிக்கை இழந்துவிடவில்லையே தவிர, எதிர்பார்த்த பலன், நலன், குடிஅரசு முறைமூலம் கிடைக்கக்காணோமே என்ற ஏக்கமும் திகைப்பும், மக்கள் மனதிலே, வேகமாக வளர்ந்த வண்ணம் இருக்கிறது.

அதனைத் தெரிந்துகொண்டே பெருந்தலைவர்கள் இதுபோலப் பேசத் தலைப்பட்டுள்ளனர்.

•

மக்களுக்குத், திகைப்பு ஏற்பட்டிருப்பதற்கும் காரணம் நிரம்ப இருக்கிறது.

எந்தக் குடி அரசு முறைபற்றி விழாக் கொண்டாடி, மக்களை, ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே! என்று பாடி, ஓட்டு வாங்கி, ஆட்சி நடத்தத் தொடங்கினார்களோ, அந்தக் காங்கிரசார் ஆட்சியிலே, வெள்ளைக்கார ஆட்சியிலே, நடைபெற்றதைவிட, அளவிலும் வகையிலும் அதிகமான அடக்குமுறை அவிழ்த்துவிடப்படுகிறது.

உலகுக்கே, சாந்திபோதனை பேசிவிட்டு, ஊர் திரும்புகிறார், நேரு பண்டிதர்; அவர் ஆட்சியிலே என்ன நடக்கிறது; எதைக்கண்டார்?

சிறையில் அடைக்கப்பட்ட அகாலியர், கலகம் செய்தனர் என்பதற்காகச், சிறையிலே சுட்டுத் தள்ளப்பட்டனர்.

வரியோ ஏறியபடி இருக்கிறது; கடன் பளுவோ, கழுத்தை நெறிக்கும் அளவுக்கு; சட்டங்களோ, தொழிலாளரின் உரிமைகளைப் பறிக்கும் விதத்தில்! செல்வவான்களுக்குத் தரப்படும் சலுகைகளோ, அவர்களே வெட்கப்படும் அளவிலும், முறையிலும்! விலைவாசியோ விஷம்போல் ஏறியபடி! நிர்வாகத்தில் ஊழல்களோ, நாற்றமெடுக்கும் அளவுக்கு!

> என்றாலும், தம்பி! மீண்டும் மீண்டும் இத்துணை கேடுபாடுகளைச் செய்திடும் காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் வெற்றி கிடைக்கிறது.

இதைக் காணும்போது மக்களுக்கு, திகைப்பும், குடி அரசு முறை மீதே ஒருவிதமான அருவருப்பும் ஏற்படத்தானே செய்யும்.

> என்ன தேர்தல்!
>
> என்ன சட்டசபை!
>
> என்ன குடி அரசு!
>
> எந்த அரசு வந்தும் நமது கஷ்டம் போகக்காணோம்.

என்று மக்கள் மனம் குமுறிப் பேசுகின்றனர்.

*

பேசுகின்றனர், திகைப்படைகின்றனர், திகில் கூடக் கொள்கின்றனர்; ஆனால், கேடுபாடு நிறைந்த காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்தும், உரிமையும் ஆற்றலும், குடி அரசுக் கோட்பாட்டின் மூலம், தங்களிடம், தரப்பட்டிருக்கிறது, என்பதை மட்டும் தெளிவாக உணர மறுக்கின்றனர்.

**விழிப்புடனிருந்தல், குடிஅரசு வெற்றிபெற மிக மிகத் தேவை.**

விழிப்புடன் இருக்கும் நிலையில் உள்ள மக்களையே, குடி அரசு முறையையும் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும், பணம் படைத்தோர், மயக்கவும், மிரட்டவும், முடிகிறது என்றால், விழிப்புணர்ச்சியே அற்றுக் கிடக்கும் மக்களிடம், ஆதிக்கக்காரர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்!

**மக்களை, மிரட்டவும் மயக்கவும் எளிதாக முடிகிறது என்று தெரியும்போது, சீமான்கள், குடிஅரசு முறையையே குத்தகைக்கு எடுத்துக்கொள்ள முடிகிறது.**

நாம் ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்துகொண்டு, அதற்கு விளக்கம், இதற்குச் சமாதானம், இந்தக் கணக்கு அந்த விவரம், என்றெல்லாம் காட்டிக் கொண்டும், எதிர்ப்பாளர்களுடன் மல்லுக்கு நின்று கொண்டும் கஷ்டப்படுவானேன்; நமது 'பாகார்டு' ஒட்ட நல்ல ஆளை அமர்த்திக் கொள்வதுபோல, நமது நலனைப் பாதுகாக்கும் முறையிலே ஆட்சி நடத்த, தக்கவர்களைத் தட்டிக்கொடுத்து, வேலை வாங்கினால் போதாதா!—என்ற முறையிலேதான் கோடீஸ்வரர்கள் உள்ளனர்.

> **ஐந்துகோடி ரூபாய் செலவிட்டுத்தான் போன பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றது என்பதைக் காங்கிரஸ் அமைச்சரே, வெட்கமின்றி ஒப்புக்கொண்டிருக்கிறார்.**

மக்கள் 'ஓட்' அளிக்கிறார்கள்; சீமான்கள் 'நோட்' அளிக்கிறார்கள். ஓட் அளித்த மக்களுக்காக, முற்போக்கான சட்டங்களை இயற்றுவோம். நோட் அளித்த சீமான்களுக்காக, அந்தச் சட்டத்திலே, நிறையச் சந்துபொந்துகளை ஏற்படுத்திக் கொடுப்போம். திட்டலில் தீவிரம் பேசுவோம் — அது மக்களுக்குத் தரும் தித்திப்பு! மாளிகைகளிலே, சீமான்களிடம், வேண்டுகோள் விடுப்போம் — அது இலட்சங்கள் பெற!!

இந்த முறையில்தானே தம்பி! காரியம் நடக்கிறது.

> மக்களே! உங்கள் வாழ்வு வளம்பெறப் புதுப்புதுத் தொழில்களை அமைக்கிறோம் என்று திட்டலில் பேசுகின்றனர். மாளிகைக்காரரிடமோ, தொழில்களை நடத்த, இன்னின்ன வசதிகள், சலுகைகள், வாய்ப்புகள், தருகிறோம், பெற்றுக்கொள்க என்று பேசுகின்றனர்.

ஐயன்மீர்! திட்டம் திட்டம் என்று பேசுகிறீர். புதுப் புதுத் தொழில் வளர்ப்பதாகக் கூறிக்கொண்டு, முதலாளிகளைத்தானே கொழுக்கவைக்கின்றீர்! என்று கேட்டுவிட்டாலோ, மூக்குச் சிவந்துவிடுகிறது அமைச்சர்களுக்கு. அப்படியானால், தொழில் வளரவேண்டாம் என்கிறீரா! மக்கள் வறுமையிலேயே வாடட்டும் என்கிறீரா!—என்று பேசி, மக்கள்மீது மாயவலை வீசுகிறார்கள்.

தம்பி! ஒரு தகவல் பார்த்தேன், ஏதோ ஒரு இதழில்! தனிப்பட்ட முதலாளி, சுயராஜ்யத்திலே தன் ஆதிக்கத்தை எந்த அளவு பெருக்கிக்கொள்ள முடிந்திருக்கிறது, என்பதற்கான தகவல். திகைத்தேபோனேன். சொல்கிறேன், கேட்கிறாயா, திகைப்படையாமல். காங்கிரஸ் கட்சிக்கு மெத்த வேண்டியவர் அல்லவா, பிர்லா! அவருடைய மாளிகையில்தானே, காந்தியாரே, சுட்டுக் கொல்லப்பட்டார்!! அவருடைய தர்மாலயங்கள், என்னென்ன தெரியுமா! குமரி முதல் இமயம் வரை என்கிறார்கள் அல்லவா —அது இவரைப் பொறுத்தவரையிலே, முற்றிலும், உண்மை.

ஹென்றி கெய்சர் எனும் அமெரிக்கக் கோடீஸ்வரருடன் கூட்டாகச் சேர்ந்து, உத்தரப்பிரதேசத்தில், மிகப் பெரிய அலுமினியத் தொழிற்சாலையைத் துவக்கி இருக்கிறார்.

தம்பி! இங்கே ஏன், தொழிற்சாலை அமைக்கக் கூடாது என்று நாம் கேட்கும்போது, படிக்காதமேதையும் படித்தமேதையும் சேர்ந்துகொண்டே, பதில் கூறுகின்றனர், நினைவிலிருக்கிறதா — கண்ட கண்ட இடத்திலே தொழிற்சாலைகளை ஆரம்பித்துவிடமுடியுமா! தொழிலுக்குத் தேவையானமூலப்பொருள் கிடைக்கவேண்டாமா? மூலப்பொருள் எங்கு கிடைக்கிறதோ அங்கு தொழில் வளரும். இதுகூடத் தெரியவில்லை, இந்தத் தி. மு. க.வுக்கு—என்று பேசிக் கெக்கலி செய்கின்றனர்.

ஆனால், தம்பி! பிர்லா, அமெரிக்கக் கூட்டுடன், உத்தரப்பிரதேசத்தில் அமைக்கிறாரே, அலுமினியத் தொழிற்சாலை, அதற்கு மிகமிகத் தேவைப்படுவது பாக்சைட்! **அந்தப் பாக்சைட் உத்தரப்பிரதேசத்தில் இல்லை. மத்திய பிரதேசத்திலிருந்து, 400 கல் தொலைவிலே இருந்து, கொண்டுவரப்படவேண்டும்!!**

இதைச் சொல்லிப்பார், காமராஜரிடம், "போ! போ! அலுமினியமாவது காரியமாவது! இங்கே வேண்டியது

சோறு!" என்று அழகாக, எந்த நாட்டு அமைச்சரும் இதுவரை சொல்லாத முறையில், கூறுவார்.

பிர்லாவின் தொழிற்சாலை, உத்தரப்பிரதேசத்தையும் மத்தியப் பிரதேசத்தையும் இணைக்கிறது.

டெல்லியில், பிர்லா பஞ்சாலை!

பம்பாயில், பிர்லாவுக்கு சென்ச்சரி நூற்பாலை.

குவாலியரில், அவருக்கு, ஜீவாஜிராவ் பஞ்சாலை.

கல்கத்தாவில், ஜெயஸ்ரீ கேசராம் பஞ்சாலை.

மத்யபிரதேசத்தில், குவாலியர் பட்டுநூல் ஆலை.

ஆமதாபாத்தில், புதிய சுவதேசி ஆலை.

ஹைதராபாத்தில், சிர்சில்க் எனும் ஆலை.

பிர்லா சணலாலை, ராமேஸ்வர் சணலாலை, பாலி சணலாலை, சூரா சணலாலை, இத்தனையும் கல்கத்தாவில்.

ஜாம் நகரில், திக்விஜயா, கம்பளி ஜவுளி ஆலை.

கல்கத்தாவில், நெசவாலையந்திர உற்பத்திச் சாலை.

கிம்கோ, என்ற பெயரில், குவாலியரில், பரத்பூரில் தொழிற்சாலைகள்.

கல்கத்தாவில், புதிய இந்தியா, மேல் கங்கை, பாரத்பூர், அவுத், புது சுவதேசி, கோவிந்து, என்று இத்தனை பெயர்களில் சர்க்கரை ஆலைகள்.

பெப்பர்மின்டு தொழிற்சாலை, கல்கத்தாவில்.

வனஸ்பதி, துங்கபத்ரா தொழிற்சாலை, பேரார் சுவதேசி வனஸ்பதி, சர்க்கரை ஆலை யந்திர உற்பத்திச் சாலை, ஓரியன்ட் காகிதத் தொழிற்சாலை, இவ்வளவும் வங்காளத்தில்.

ஹைதராபாத்தில் சிர்பூர் காகித ஆலை.

ஓரியன்ட் மின்சாரவிசிறித்தொழிற்சாலை கல்கத்தாவில்.

பம்பாயில் ஹிண்ட் சைகல் தொழிற்சாலை.

கல்கத்தாவில், இந்துஸ்தான் மோடார் தொழிற்சாலை.

ஜெய்பூரில், தேசிய உருளைகள் தயாரிப்புத் தொழிற்சாலை.

பம்பாயில், உருக்கு உலை.

கல்கத்தாவில், யந்திரச் சாமான்கள் தயாரிப்புத் தொழிற்சாலை; ரேடியோ, பிளாஸ்டிக் தொழிற்சாலைகள், மருந்துவகை தயாரிக்கும் தொழிற்சாலை, இவ்வளவும்.

போர்பந்தரில் சோடா உப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை.

தேடத்தேடத், தகவல்கள் நிறையக் கிடைக்கும். கிடைத்தது?

காங்கிரசாட்சி கனதனவான்களுக்குக் கரும்பாக இனிப்பதிலே வியப்பு என்ன?

இத்தனை, விதவிதமான தொழிற்சாலைகளை நடத்தும், பிர்லாவுக்கு, மூலதனம், வெளிநாட்டுக் கடன், வெளிநாட்டு யந்திரம், இவ்வளவும் தேவைப்படும் அளவுக்குக் கிடைக்கிறது; தொழில் தழைக்கிறது. காங்கிரசாட்சியின் துணையின்றி, எப்படி இப்படிப்பட்ட 'ராஜ்யத்தை' ஒரு பிர்லா அமைத்து, ஆண்டிடமுடியும்.

காங்கிரசாட்சியின் துணை இவ்வளவுக்கும் தேவைப்படும்போது, தேர்தலிலே, காங்கிரசை வெற்றிபெறச் செய்வதிலே, பிர்லாவுக்கு அக்கறை எப்படி ஏற்படாமல் போகும். அந்த அக்கறை, கோடிகளாகின்றன! கோடிகள் இருப்பதால்,கோணல்ஆட்சி நடாத்திடினும், மக்களை மயக்கி, மீண்டும் பீடம் ஏறக் காங்கிரஸ் கட்சியால் முடிகிறது.

குடி அரசு, மக்களின் நலனைக் காத்திடும் அரசாகாமல் இருக்கிறது என்றால், தம்பி! காரணம் இப்போது புரிகிறது அல்லவா?

பலப்பல கோடி ரூபாய்கள், திட்டங்களின் பெயரால் செலவிடப்படுகின்றன; இதிலே, பெரும்பங்கு தனிப்பட்ட முதலாளிகளுக்குத்தான் சேருகிறது; அவர்கள் தொழில் வளர, இலாபம் பெருக.

> "முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே, 233 கோடி ரூபாய், தனியார் துறைக்கு ஒதுக்கினீர்களே—இதிலே, பலதொழில்களை அமைத்துக் கொண்டு, ஏகபோக பாத்யதை கொண்டாடும் 20 பெரிய தொழிலதிபர்களிடம் போய்ச் சேர்ந்தது எவ்வளவு தொகை? பரவலாகத் தொழில் வளரச், சிறு முதலாளிகளுக்குப் போய்ச் சேர்ந்தது எவ்வளவு தொகை?
>
> இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, தனியார் துறைக்கு 570 கோடி ரூபாய் ஒதுக்குகிறீர்களே, இதை எப்படிப் பகிர்ந்தளிக்கப் போகிறீர்கள்.
>
> தொழில் உலகில், வல்லரசு அமைத்துக் கொள்ளப் பெரிய முதலாளிகளால் முடிகிறது! அதைத் தடுத்து நிறுத்த உங்களால் முடியவில்லை.
>
> தொழிற்சாலை அதிபர்கள், மேலும் மேலும் வலிவு அடைகிறார்கள் ஆதிக்கம் பெறுகிறார்கள்."

என்று அசோக்மேத்தா பாராளுமன்றத்திலேயே பேசினார். பேசி? நான் எப்போதாவது எடுத்துச் சொன்னால்தான் வெளியே தெரியுமே தவிர, இந்துவும், மெயிலும், இன்னபிற இதழ்களும், இதனையா எழுதி மக்களுக்கு உண்மை நிலையைத் தெரியச் செய்திடும்! பத்திரிகைகள் மட்டும் என்ன—குளைக்கல்லும் பிடாரிதான் என்ற பழமொழிப் படிதானே!


•

தம்பி! அரசு முறை, எவ்விதம் இருப்பினும், முடி அரசு ஆகட்டும், குடி அரசு ஆகட்டும், இங்கிலாந்தில் உள்ளதுபோல குடிக் கோனாட்சியாகட்டும், முறை எவ்விதம் இருப்பினும், தொழிலதிபர்களிடம் சிக்கிக்கொண்டால், தீர்ந்தது—ஆட்டிவைக்கிறபடி ஆடும், நீட்டிய இடத்தில் கையெழுத்திடும்!

குடி அரசு முறையையும் வைத்துக்கொண்டு, சமுகத்திலேயும், தொழில் உலகிலேயும் ஆதிக்கக்காரர்களுக்குப் பிடி இருக்கும்படியும் அனுமதித்துவிட்டால், புத்தியுள்ள ஒரு மன்னனைகூடக், குடி அரசுக் கோட்பாடு பேசும், அமைச்சர்களை ஆட்டிப்படைக்க முடியும்.

அடுத்த கிழமை அப்படிப்பட்ட ஒரு மன்னனைக் காணலாம்.

அண்ணன்,



# அந்திக்கலம்பக

யாரு? பொன்னியா! வாடிம்மா, வா! எங்கே, நீயும் அவளோட பேச்சைக் கேட்டுக்கொண்டு, இங்கே வருவதை நிறுத்திக்கொண்டுவிட்டியோன்னு பார்த்தேன். ஒவ்வொருவருடைய உண்மையான குணமும், பச்சென்று இருக்கிறபோது தெரியாது பொன்னி. கஷ்டம் ஏற்படுகிற போதுதான், யாரார் உண்மையான அன்பு கொண்டவா என்பதும், எதெது வெளி வேஷம் என்பதும் தெரியும். என்னடி பொன்னி! நான், அசடு மாதிரி எதை எதையோ உளறிக்கொட்டுவதாக எண்ணிக்கொண்டா, வாய் திறவாமல் இருக்கறே. நான் சொல்வதிலே, குற்றம் இருந்தா சொல்லு. நான் அப்படி அதிகமாப் படித்தவள் அல்ல. என் மனதிலே பட்டதைச் சொல்றேன், பொன்னி! பாலை பாங்கிலே நாங்க போட்ட பணம் போயிட்டது தெரிஞ்சதும், அதற்கு முன்னே, எங்களைக் கண்டா, சிரித்துப் பேசிண்டு இருந்தவர்களெல்லாம், கண்டும் காணாதது மாதிரி, நடந்துகொண்டா, மனம், பொன்னி! எவ்வளவு வேதனைப்படும். இவர்களுக்கெல்லாம் இப்படி ஒரு கஷ்ட காலம் வரவே வராதா? எப்பவுமேவா, இவர்களெல்லாம், கொடி கட்டி ஆண்டுகொண்டு இருக்கப்போரு?

பார்த்தயா, பார்த்தயா! உனக்கு ஏற்பட்டது போலக் கஷ்டநஷ்டம், மத்தவர்களுக்கும் ஏற்படணும்னு, உன்னைப் போல இருக்கற, உத்தமிகள், மனசாலேகூட நினைக்கலாமா? நமக்கு ஏற்பட்ட வேதனைபோல, வேறே ஒருவருக்கும் ஏற்படக்கூடாது என்று எண்ணுவதல்லவா, உன்னைப் போன்ற நல்ல குணவதிகளுக்கு இலக்ஷணம்......

வாய்தவறிச் சொல்லிவிட்டேன், பொன்னி! நான் அப்படிப்பட்ட இராதகி அல்ல; உனக்கே தெரியும். சிலபேர்

★ சி. என். ஏ. ★



நடந்துகொண்ட விதம் இருக்கே, அது என்னை, என்னென்னமோ எண்ணும்படியும், பேசும்படியும் செய்துவிட்டது.

பொதுவா, நமக்கெல்லாம், ஒரு பெரிய குறை இருக்குது... இந்தக் குழப்பத்துக்கே, அதுதான் காரணம். துக்கத்தைத் தாங்கிக்கொள்கிற சக்தியும் நமக்குக் குறைவு. ஒருவர் கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுக் கலக்கம் அடைகிறபோது ஆறுதல் சொல்லவும், தைரியம் சொல்லவும், நமக்குத் தெரியறது இல்லை

என்னமோ, பொன்னி! நீ அதைத் தெரியாத்தனம்னு சொல்றே. எனக்கு அப்படித் தோன்றலை இல்லை. இப்ப, நாம நொந்துபோயிருக்கறோம், நமக்கு என்ன வேண்டி இருக்கு விருந்தும் வைபவமும்னு தான் இருந்திருக்கணும்; ஆனா, நான்தான் ஒரு விவரங்கெட்டவளாச்சே, போனேன், வடிவா வீட்டு விசேஷத்துக்கு......

அதுதான் நல்லது. நமக்கு ஒரு கஷ்டம் ஏற்பட்டுவிட்ட உடனே, மூலையிலே உட்கார்ந்துகொண்டு கதறுவதே வேலையா இருக்கக் கூடாது.

அப்படி எண்ணிக்கொண்டுதான் போனேன். போகும்போதே, வடிவா, என்னைப் பார்த்த பார்வை, எனக்கு பிடிக்கவே இல்லை......

உன் மனம் இருக்கற நிலையிலே, உனக்கு, எல்லாம் வெறுப்பா, அதிசயமாத் தெரியும்.

இல்லை, பொன்னி! நிச்சயமா இல்லை எனக்கென்ன இதுகூடவா தெரியாது நம்மை பார்த்ததும், சந்தோஷம் ஏற்பட்டிருக்குதா, அலட்சியம் காட்டுகிறார்களா என்பதைக்கூடவா தெரிந்துகொள்ளத் தெரியாது......

சரி. சொல்லு வடிவு ஒரு மாதிரியாப் பார்த்தா......

நான்; நாம இதைக் கவனிக்கக் கூடாது என்று எண்ணிக்கொண்டு எப்பவும்போலத்தான் இருந்தேன்.

இல்லையே, போய், கூடத்துக் கம்பத்திலே, சாய்ந்தபடி உட்கார்ந்துகொண்டதாக அல்லவா, சொன்னே. வடிவு.

ஆமாம், இதிலே, என்னடியம்மா தப்பு! நடந்துபோன அலுப்பு எனக்கு. முதுகு வலி வேறே நாலு நாட்களா! அதனாலே, கம்பத்திலே, சாய்ந்துகொண்டேன். இதிலே, என்ன தப்பு?

ஒரு தப்பும் இல்லை. உன்னோட முதுகு வலி உன்னை அப்படி உட்கார வைத்தது; ஆனா, வடிவாளுக்கு அவளோட அத்தை இருக்காளே ......

அந்த அறுதலா?......... அவ, என்ன சொன்னா......

அவளுக்கும் உனக்கும் பிடிக்காது என்பது, இப்ப, நான் அவ பேச்சை எடுத்த உடனே, 'அறுதல்'னு சொல்றயேல்லோ, அதிலேயே புரியுது......

அவளோட யோக்யதை என்ன. ... அவளாலே நான் என்னென்ன இம்சைபட்டிருக்கறேன், என்பதைக் கேட்டா, சொல்றேன்...... அவ இருக்காளே......

அவளோட கதை இருக்கட்டும். அவ, நீ, கம்பத்திலே சாய்ந்துகொண்டு, கவலையோட இருந்ததைப் பார்த்திருக்கா. பார்த்துவிட்டு, வடிவாளிடம், போடி, பாவம், அவ, மனசங்கடத்தோட இருக்கா, பேசிச் சந்தோஷப்படுத்து; நான் பேசினா, அவ, ஏதாவது தப்பர்த்தம்செய்துகொள்வா; நீ போய், காப்பி சாப்பிடச் சொல்லுன்னு, சொல்லியிருக்கா...

யார்? அவளா? யாரை, நம்பச் சொல்றே, இந்தக் கட்டுக்கதையை. அவளுக்குத்தான், என்னைப்பார்த்தாலே, முகம், எள்ளும் கொள்ளும் வெடிப்பதுபோலாகிவிடுமே! அவளுக்கு, என்னிடம் கனிவு ஏற்பட்டதுன்னு சொன்னா யார் நம்புவா?

நம்பமாட்டே! தெரியுமே, எனக்கு அவளைப்பற்றி உனக்கு இருக்கற சந்தேகம் இருக்கே, அது உன்னை நம்ப விடாது... ஆனா, நான், விசாரித்த பிறகு தெரிந்துகொண்ட, உண்மையைச்சொன்னேன். உள்ளபடி, உன்னைக் கண்டதும், அவளுக்கு, பழைய பகை, கோபம், வெறுப்பு, எல்லாம் பஞ்சு பஞ்சாப் போய்விட்டது. வடிவுக்கு, விவரம் தெரியாதே, என்பதாலே. அவதான், போய், உபசாரம் செய்யச் சொல்லி, அனுப்பினா...என், தானா வருகிற புன்னகையை மறைக்கறே...

சொல்லு...... பொன்னி! கதை போல அல்லவா, இருக்கு...... உன்னை, அவ்வளவு தூரம், அவ சரிபடுத்தி அனுப்பி இருக்கான்னு தெரியுது...... நான்தான் கேட்கறேன், பொன்னி! நீ சொல்றதை நான் உண்மை என்றே, வைத்துக்கொள்றேன். வடிவு, வந்ததும் வராததுமா என்னை என்ன கேட்டா தெரியுமா? நான் இருக்கற இருப்பு என்ன? பட்டுண்டிருக்கற கஷ்டம் எப்படிப்பட்டது? அதைப் பத்தி ஒரு நாலு வார்த்தை அனுதாபமாப் பேசாமே, என்னை என்ன கேட்டா தெரியுமோ? நாலு பேர் எதிரிலே!

என்ன கேட்டா, வடிவு?

மாமி! மூக்குத்தி வைரம் தானேன்னு கேட்டா? பக்கத்திலே இருந்தவா, சிரிக்கறா, இந்த வாய்த் துடுக்குக்காரி, என்னதான் எங்க பணம் பாங்க் முழுகினதிலே போயிட்டிருந்தாலும், இப்படியா கேட்கறது? மூக்குத்தி வைரம் தானேன்னு! எதுக்காக வரவேணும் அந்தச் சந்தேகம்? உனக்குத்தான் பணமெல்லாம் போச்சே, மூக்குத்தி வைரத்திலே போட்டுக் கொள்கிற யோக்யதை ஏதுன்னு கேட்கறதாத்தானே, அர்த்தம். இவளுக்குத் தெரியாதா, வைரம் தான் என்பது? என்னதான் எங்களுக்குக் கஷ்ட காலம் வந்துவிட்டாலும், ஒரு வைர மூக்குத்தி போட்டுக் கொள்ளக்கூடவா, வக்கு இல்லாமப் போகும்?

இன்னும் பேசப் போறயா, இதோடு, முடிஞ்சுதா?

என்ன நியாயம்டி பேசறே பொன்னி! அவ அப்படிக் குத்தலா பேசலாமா?

நிச்சயமாப் பேசப்படாது.

அதிலேயும் நான் நொந்துபோய் இருக்கற சமயத்திலே...

எந்தமாதிரிச் சமயமா இருந்தாலும்; ஒருத்தர் மனதைப் புண்படுத்தற மாதிரியா, குத்தல் பேசறது. தப்பு. ஆனா, வடிவு, குத்தல் பேசினதாக நீ எண்ணிக்கொண்டயே தவிர, அவ சகஜமான முறையிலேதான், கேட்டா.

சமாதானம் சொல்ல வந்துவிட்டயா! சகஜமான பேச்சா அது?

பைத்யமே! பைத்யமே! அவ, ஏன் அதைக்கேட்டா என்பது தெரிஞ்சா, நீ, சீறிச் சீறிப் பேசமாட்டே. சிரிச்சிச் சிரிச்சி வயிறு புண்ணாகிப்போகும். வடிவு, அவளோட அப்பாவை, வைர மூக்குத்தி வாங்கித் தரச்சொல்லி, வம்பு செய்திருக்கா. அவ்விடம் இருக்கு, இவளிடம் இருக்கு, என்று காட்டிப் பேசறபோது, உன்னோட மூக்குத்தியைப் பத்தியும் சொல்லி இருக்கா. வடிவோட அப்பா இருக்காரே, அவர் ஒரு அசகாய சூர்

போல இருக்கு. வடிவாளை ஏமாத்த, அடி ஏமாளிப்பெண்ணே! அவளோட மூக்குத்தி வைரம்னு எண்ணிக்கொண்டே! அது வைரம் அல்ல. அது ரங்கோன் கமலம்னு சொல்லி இருக்கார். இவளுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. இல்லை, வைரம்தான்னு சொல்லி இருக்கா அசடு! வைரம் இல்லா! அவளை அவ புருஷன் ஏமாத்தி இருக்கான். அது ரங்கோன் கமலம்தான் — என்று அடித்துப் பேசி இருக்கார். இவளுக்கு இலேசாகச் சந்தேகம். அதனாலேதான், உன்னைக் கேட்டாளே தவிர, குத்தல் பேச்சுமல்ல; இண்டல் பேச்சும் அல்ல.

நெஜமாவா... வடிவு எப்பவும் அடக்கமானவ, அடாதுடியாப் பேசமாட்டாளே, இன்னக்கி ஏன் இப்படிப் பேசினான்னு, எனக்குச் சந்தேகமாத்தான் இருந்தது. அவ கேட்டது, இதுக்காகத்தானா...

இதுக்காகவேதான். எல்லாம் விசாரித்து நான் தெரிந்துகொண்டுதான் பேசறேன்.

நீ, தீரவிசாரிக்காமத்தான், எந்த முடிவும் சொல்லமாட்டயே, பொன்னி! நீ, சொன்ன பிறகுதான் என் மனம் சாந்தியாச்சி.

சந்தேகம் போய்விட்டதல்லவா? இன்னும் இருக்குமா, சந்தேகம். வடிவு சகஜமாத்தான் பேசி இருக்கா...

ஆனா, இப்ப, உனக்கு ஒரு புதுச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டிருக்கணுமே...

எப்படிப் பொன்னி! அதைக் கண்டுபிடிச்சே... கெட்டிக்காரிடி, நீ எனக்கு, உண்மையாகவே, இது வைரம்தானா, இல்லை, வடிவாளோட அப்பா சொன்னமாதிரி, எங்களவர், என்னை ஏமாத்திவிட்டிருக்காரான்னு, சந்தேகந்தான் இருக்கு...

ஏற்பட்டுவிட்டதல்லவா? என்ன செய்யப்போறே, தெரியுமோ, அவர் வந்ததும்...

என்ன செய்வேன்...சண்டைக்கு நிப்பேனா...அது நான் இல்லாடிம்மா...

சண்டை போட்டாக்கூடப் பரவாயில்லையே, முகத்தைத்தூக்கிவைத்துக்கொள்ளப்போறே. சாக்கிட்டுச் சாக்கிட்டுப் பேசப்போறே. நேரடியா, கேட்டு உண்மையைத் தெரிந்துகொள்கிற வழக்கம்தான் நமக்குக் கிடையாதே.........இந்தக் காலத்திலே, யாரோட பேச்சையும் நம்புவதற்கு இல்லை. ஏமாந்தவ இடைச்சா, என்னதான் செய்ய மாட்டா...ரங்கோன் கமலத்தையும் வைரம்னு சொல்லி ஏமாத்துவா, பித்தளைக்குப் பாலிஷ்போட்டு, அசல் தங்கம்னுகூடச்சொல்லுவா ...அப்படி இப்படின்னு ஆரம்பிச்சி குடைந்துவிடமாட்டயோ......

போடி, போக்கிரி! கேட்டுத் தெரிந்துகொள்ளணும்னு, யாருக்குத்தான் எண்ணம் பிறக்காது.

எண்ணம் ஏற்படுவதிலே, தவறுன்னு, நான் சொல்கிறேன், நேரடியாகவே கேட்டு, உண்மையைத் தெரிந்துகொள்ளணும். சுற்றிவளைச்சிப்பேசி, ஒண்ணிலே இருந்து மற்ற ஒண்ணுக்குத் தாவிச், சந்தேகத்தையும் சச்சரவையும் அதிகப்படுத்திக்கொள்ளக் கூடாதல்லவா......

சரிடிம்மா! நான் வாய்திறந்து, எதுவும் கேட்கவே இல்லை, போயேன், வைரமாகவான்னா இருக்கட்டும், ரங்கோனாவாவது இருந்து தொலைக்கட்டும். அதைக் கேட்கப் போய், வம்பு எதற்கு?

இதுவும் சரி அல்ல. கேட்காமலே இருந்தா நல்லதா! மனதிலே அந்த எண்ணம் குடையுமே, அது என்னென்ன செய்யும் தெரியுமேல்லோ?

என்ன செய்யும்...? சொல்லிவிடேன், அதையும்?

முகத்தைக் கழுவிப் பொட்டு வைத்துக்கொள்ளவிடாது. நல்ல புடவை கட்டிக்கொள்ளவிடாது. சிரிக்கவிடாது. தட்டுமுட்டுச் சாமானெல்லாம், தடதடன்னு கீழே விழும். கடுகுபோடாமலே தாளிப்பு நடக்கும். வெங்காயத்தோல், உரிக்காமலே குழம்பிலே மிதக்கும்...... பாய் ஒருபக்கம், தலையணை ஒருபக்கம் கிடக்கும். பால் பொங்கி அடுப்புக்குள்ளே விழும். உம்! இந்த அமர்க்களமெல்லாம்தானே, நம்முடைய போர்முறைகள்!!

பொன்னி! நீ, பெண்ணாகப் பிறந்ததே தப்பு'!

அவர்கூட, எப்போதாவது, அதுபோலத்தான் சொல்லுவார். அது கிடக்கட்டும், நான் சொன்னதிலே, தப்பு உண்டா, சொல்லு. பெண்களுக்குக் கோபம்வந்தால், இதுதானே, நடக்கிறது.

ஆமாமாம்! ஆண்களுக்குக் கோபம் வந்தால் மட்டும், ஒரு அமர்க்களமும் செய்வதில்லைபோல இருக்கு.

நான் சொன்னேனா அப்படி. எப்படி எப்படி நடந்துகொண்டால், குடும்பத்திலே, குளறுபடி இல்லாமல், குதூகலமாக இருக்கும் என்கிற வழி, பெண்களுக்கும் தெரியவில்லை, ஆண்களுக்கும் தெரியவில்லை. அது ஒரு பெரியகலை! என்னென்ன கலை எல்லாமோ படிக்கிறார்கள், குடும்பக்கலை மட்டும் யாரும் படிக்கிறதாகத் தெரியவில்லை.

ஏன்! நீ, ஆரம்பித்துவிடுவதுதானே, அதற்கு ஒரு காலேஜ்!!

கேலி பேசிவிட்டால் போதுமா? காலேஜிலே படிக்கிறபெண்களுக்கு மட்டும், இந்தக் கலை தெரிந்துவிட்டதா, என்ன? தெரியுமா, ஒரு விஷயம். கராச்சி பல்கலைக்கழகத்திலே படிக்கிற பெண்களுடைய எண்ணம் என்ன என்பதைக் கண்டறிய ஒரு விசாரணை நடத்தினார்கள். அதிலே, ஒரு உண்மை வெளிவந்தது. 100-க்கு 64-பெண்கள், கலியாணமே செய்துகொள்ளப்போவதில்லை — இஷ்டமில்லை — என்று சொல்லிவிட்டார்களாம்...

இதென்னடி அக்ரமம்! கலியாணமே வேண்டாமாமா!

ஆமாம்! வேண்டாம் என்று தீர்மானமாகச் சொன்னார்களாம்.

அதென்ன வெறுப்பு கலியாணத்தின் பேரிலே?

வெறுப்பு என்றுகூட எனக்குத் தோன்றவில்லை. கலியாணம் செய்துகொண்டால், குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தவேண்டும்—அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள விருப்பம் இல்லை, இந்தப் பெண்களுக்கு. பயம் இருக்கும்; தங்களுக்கு அந்தத் திறமை இருக்கிறதா இல்லையா என்பதிலே.

பாகிஸ்தானில் இருக்கிற பெண்கள்தானே.

ஆமாம். அதனால் என்ன? இங்கே, அப்படி ஒரு விசாரணை நடத்தினாலும், அந்தப் பெண்கள் சொன்னது போலத்தான் சொல்லுவார்கள்.

பாகிஸ்தானிலே, காலேஜ் பெண்களுக்கு, என்னென்னமோ, கட்டுத்திட்டங்கள் போட்டிருக்காளாமே...

அது எப்படி உனக்குத் தெரிந்தது? கிணற்றுத் தவளைடி பொன்னி, நான்; எனக்கு என்ன தெரியும் உலகம் என்று பேசுபவ

ளாச்சே—உனக்கு எப்படி இது தெரிந்தது.

எல்லாம், அவர், பேப்பர்லே படித்துச் சொன்னதுதான். விவரம், சொல்லடின்னு......

பாகிஸ்தானிலே, சில காலேஜ்களில், பெண்கள், நைலான் போடக்கூடாது, உதட்டுச் சாயம் பூசக்கூடாது, காலேஜிக்குள்ளே, ஆண்களுடன் காரணமில்லாமல் பேசக்கூடாது என்றெல்லாம் கட்டுத்திட்டம் ஏற்பாடாகி இருக்கிறதாகப் பேப்பரில் பார்த்தேன். காலேஜிக்கு உள்ளே போகக்கூட, பெண்களுக்குத் தனி வழியாம்.

அப்படியா கட்டுத்திட்டம் இருக்கு. ஆனா பொன்னி! ஒரு வகையிலே பார்த்தா, சமூகத்துக்கு, இப்படிச் சில கட்டுத்திட்டம் இருக்கவேண்டும்னு தோணறது. தன்னிச்சையா, நடக்கறதாலே, சில சில சமயத்திலே, ரசாபாசம் ஏற்பட்டுவிடுது...இல்லேன்னு சொல்ல முடியுமா? கைகோர்த்துண்டு, போனாத்தான் சிநேகிதமா? கன்னத்திலே, ஒருத்தருக்கு ஒருத்தர், ஆணும் பெண்ணும், முத்தம் கொடுத்துக் கொண்டாத்தான், மரியாதைன்னு அர்த்தமா! நாகரிகம்னா, இதெல்லாம் தானா!! சில கட்டுத்திட்டம் இருக்கத்தான் வேணும்.

தெளிவு ஏற்பட்டுவிட்டா, ரசாபாசம் ஏற்படாது. ஆனா, அந்தத் தெளிவு, சீக்கிரத்திலே ஏற்படுமா? சொல்லமுடியாது. பகட்டு இது, பவுன் இது என்கிற பாகுபாடு, எல்லோருக்குமா தெரிந்துவிடமுடியும். அதனாலே, பக்குவம் ஏற்படுகிற வரையிலே, கட்டுத்திட்டம் இருக்கத்தான் வேண்டும். ஆனா, அதைக் காரணமாக் காட்டிப், பெண்களை அடக்க ஒடுக்கக் கூடாது.

அது சரியான பேச்சு! ஆனா பெண்கள் சுதந்திரம் என்று சொல்லிக்கொண்டு, இந்தக் காலத்திலே, மற்றமற்ற நாட்டிலே. ஆணும் பெண்ணும் கட்டிப் பிடிச்சிண்டு கூத்தாடுறாளே—சினிமாவிலே பார்க்கறமே—அது கூடாது, பார்.

இந்தக் காலத்திலே, நாகரிகத்தின் பேரிலே பழி போட்டுவிட்டு, ராக்—அண்—ரோல், என்ற நாட்டியமாடி, நாசமாப் போறாங்க,—என்பது உண்மைதான். ஆனா, அந்தக் காலத்திலே, பக்தியின் பேரைச் சொல்லிக்கொண்டு, கோபிகைகள், கோபாலகிருஷ்ணனோடு, 'ரசலீலா' நாட்டியமாடினாளாமே, அதுவும் தவறுதானே......

விடமாட்டயே, நீ. உன்னோட பிரச்சார வேலையை. காத்திண்டே இருந்தாப்போலிருக்கு, எப்ப ஊசி போடலாம்னு...சுயமரியாதைக் கட்சி பேசாவிட்டா, உனக்குத்தான், தூக்கம் பிடிக்காதே......

இதைச் சொன்னா, சுயமரியாதைக் கட்சின்னு, தள்ளிவிடுவதா......

தள்ளிவிடவில்லே, பொன்னி! நெஜமாச் சொல்றேன், நான், உன்னோட, வேடிக்கைக்காக, எதிர்வாதம் பேசுறனே, தவிர, நீ சொல்கிற சுயமரியாதைக் கொள்கைகள், வரவர, சரின்னுதான் என் மனசுக்குத் தோணுது.

அம்மா, புண்யவதி! அந்த அளவுக்கு வந்தா, அது போதும்.

ஆனா, உன்னைப்போல, ஒரேயடியா, பழசெல்லாம் வேண்டாம்னு, உதறித் தள்ளிவிடத் தைரியம் ஏற்படவில்லே.

தைரியத்துக்கு ஒரு குறைச்சலும் இல்லே. ஆனா, பழைய முறையிலே நடந்துகொண்டாத்தான், கௌரவம்னு, ஒரு தப்பான, எண்ணம் இருக்கு, உன்னைப்போன்றவங்க, மனசிலே. அதுதான் உங்களைத் தடுக்குது.

எல்லாம் போகப் போகச் சரியாகிவிடும்.

ஆமாம். உலகம் முன்போலவா இருக்குது.

உலகச் சண்டை மூண்டுவிடும்னு, போனமாசமெல்லாம், பயம் இருந்ததே பொன்னி! இப்ப, எப்படி இருக்கு.

பயம்தான்! அதாவது உலகச் சண்டை ஏற்பட்டுவிட்டா, எல்லோருமே அழிந்துவிடும்படி ஏற்பட்டுவிடும்னு, பயம்! அந்தப் பயம்தான், இப்ப, பாதுகாப்பா, இருக்கு..

தரித்திரம் ஏற ஏற, தங்கத்தின் விலையிலே இருந்து தவிட்டுவிலை வரையிலே ஏறித்தானே, தீரும். நான்கூட, தி.மு.க. கூட்டம் ஒண்ணு போய்க் கேட்டேன்...

அடிசக்கேன்னனும்! தி.மு.க.வுக்கும் போக ஆரம்பிச்சாச்சா... யார் பேசுனா...?

நாவலர்—அதாவது நெடுஞ்செழியன். அவர்தான் சொன்னார், இந்த ஆட்சி நல்லதா கெட்டதான்னு, அடுக்களையைப் போய்ப் பார்த்தா தெரியுமே—இதற்கு ஆயிரத்தெட்டுக் காரணம் தேடிக் கொண்டிருப்பானேன்னு...

அடுக்களையிலே என்ன இருக்காம்...

அரிசி பருப்பு மிளகாய், நெய், எண்ணெய் எல்லாம் உன்வீட்டிலே படுக்கை அறையிலா இருக்கு, அடுக்களையிலேதானே! விலைவாசி எவ்வளவு அநியாயமா ஏறிவிட்டு இருக்குது என்கிற விஷயம், அடுக்களை போனாப் புரியுது அல்லவா!

அட அதைச் சொன்னாரா?

ஆமாம் இப்படி அநியாயமாக விலையெல்லாம் ஏறிக்கொண்டே போகுது; ஒரு ஆட்சி இதைப் பார்த்துக் கொண்டு, கைகட்டிக் கொண்டு இருக்குதே, இது நல்ல ஆட்சியான்னு கேட்கிறார்.

பொன்னி! அதோ எங்களவர்தான், வருகிறார். நாலு நாளா அவருக்கு இருமல்!!

இருமல் சத்தத்திலிருந்தே, வருவது 'அவர்'னு தெரிந்து. கொண்டாயா ... சரி ... சரி... நான் போய்வருகிறேன்.

பொன்னி! இனி, நாம எல்லோரும், பழையபடி, இருக்கணும்......

நான், எப்பவும் ஒரே விதமாகத்தான் இருக்கிறவாடிக்கை. வரட்டுமா...

செய், பொன்னி! வடிவுக்குச் சொல்லு ... வீணாச் சந்தேகப்பட்டேன், என்கிற விஷயத்தை.

நீயும் உன் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளு—அதோ வந்துவிட்டார் ... வைரமா அல்லவான்னு கேட்டுத் தெரிந்துகொள்.

போடி போக்கிரி! அவர் அன்போடு, கண்ணாடிக்கல்லே வாங்கிக் கொடுத்தாலும், அது அசல் வைரத்துக்குச் சமம்தானேடி......

அது சரி, போ! இந்தப்பேச்சு, என்னிடம் பேசி என்ன கிடைக்கப் போகுதுஉனக்கு ... போய் அவரிடம் பேசினாலும்......

உன் முதுக்குக்கு இப்ப, குத்து கேட்குது...

என் முதுகுக்குத்தானே!...உம்!... உன் கன்னத்துக்கு...!!

❀

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15
இல்லம் ...118




காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு; "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.